

# කාර්ය සාධන වාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# PERFORMANCE REPORT

# 2025


ආගමන හා විගමන දෙපාර්තමේන්තුව

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

Department of Immigration and Emigration

**ශ්‍රී ලංකාව** **இலங்கை** **SRI LANKA**

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

# செயலாற்றுகை அறிக்கை 2025

செலவினத் தலைப்பு இல - 226

கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்பு பிரிவு

# குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் ஆசிச்செய்தி



இலங்கையின் அபிவிருத்தி செயல்முறைக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதன் மூலம், இலங்கையை ஆசியாவின் பொருளாதார மற்றும் நிதி மையமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட "வளமான நாடு - அழகான வாழ்க்கை" என்ற அரசாங்கத்தின் கொள்கைத் திட்டத்துடன் இணைந்து முன்னோக்கிப் பயணிப்பதற்கு குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

பிராந்தியத்தின் முன்னோடி குடிவரவு மற்றும் குடியகல்வு சேவையாகத் திகழ்வதற்கான தொலைநோக்குப் பார்வையை அடையும் பொருட்டு அர்ப்பணிப்புடன் செயலாற்றிவரும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான அதன் செயலாற்றுகை அறிக்கைக்கு வாழ்த்துச் செய்தியொன்றை வழங்கக் கிடைத்ததை ஒரு பாக்கியமாகக் கருதுகின்றேன்.

சுற்றுலாப் பயணிகளை பெருமளவில் ஈர்ப்பதன் மூலம் அந்நிய செலாவணியை ஈட்டிக்கொள்வதற்கும், நமது நாடு இழந்த சந்தை வாய்ப்புகளை மேம்படுத்திக்கொள்வதற்கும், குடிவரவு மற்றும் குடியகல்வு செயன்முறைகளை மிகவும் சுமுகமாக்கும் நோக்கிலும் 7 நாடுகளுக்கு இலவச சுற்றுலா விசாக்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தமை ஒரு சிறப்பான வெற்றியாகக் குறிப்பிட முடியும். அத்துடன், பயணிகள் தடைநீக்கப் பணிகளை முறைப்படுத்துவதற்காக, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய வளாகத்தில் பயணிகள் வருகை மற்றும் புறப்படும் முனையங்களுக்கு தானியங்கி பயணிகள் தடைநீக்க வாயில்களை (e-gates) அறிமுகப்படுத்தும் திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்த முடிந்துள்ளது. மேலும், வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள்/அலுவலகங்கள் மூலம் இணையவழி (Online) முறைமையின் கீழ் கடவுச்சீட்டுகளுக்கு விண்ணப்பிப்பதற்கான கணினித் தரவுத்தளத்தில் தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டுவருகின்றன. அவ்வாறே, இயந்திரத்தால் வாசிக்க முடியாத கடவுச்சீட்டுகளுக்கு (NMRP) பதிலாக, இலத்திரனியல் இயந்திரத்தால் வாசிக்கக்கூடிய ஆவணத்தை (ETD) வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, யுத்த காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட இறங்குதுறை அல்லது முறையான கடவுச்சீட்டு இன்றி நாட்டை விட்டு வெளியேறி, இந்தியாவில் அகதி அந்தஸ்து பெற்று, பின்னர் இலங்கை குடியுரிமை உறுதிப்படுத்தப்பட்ட நபர்கள், தங்களின் சுயவிருப்பத்தின் பேரில் மீண்டும் தாயகம் திரும்பும் போது அவர்களுக்கு குடிவரவு தடைநீக்க வசதிகளை வழங்கி அவர்களுக்கு தடைகள் இன்றி நாட்டுக்குள் நுழைவதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்களுக்காக எம்மால் வழங்கப்படும் சேவைகளை மேலும் வினைத்திறனுடனும் பரந்த அளவிலும் மேற்கொள்வதற்காக, 2025 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தை ஸ்தாபிக்க முடிந்தமையும் நாம் பெற்ற மற்றுமொரு வெற்றியாகும்.

2025 ஆம் ஆண்டில், எமது தொலைநோக்கு மற்றும் செயற்பணிக்கு அமைய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு வழிகாட்டிய கௌரவ ஜனாதிபதி அவர்கள், கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள், அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சர் அவர்கள், அமைச்சின் செயலாளர் அவர்கள், ஏனைய அமைச்சுகள், திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து அரச நிறுவனங்களுக்கும், வெளிநாட்டு தூதரகங்களில் பணியாற்றும் அதிகாரிகளுக்கும், அனைத்து சர்வதேச அமைப்புகளுக்கும் மற்றும் அனைத்து சேவை பெறுநர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன், பொதுமக்களுக்கு அர்ப்பணிப்புடன் தொடர்ச்சியான சேவையை வழங்குவதற்காக பணியாற்றிவரும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் ஒட்டுமொத்த பணியாளர்களின் சேவையையும் பாராட்டுவதற்கு இதனை ஒரு சந்தர்ப்பமாகக் கருதுகின்றேன்.

**ஐ. சமிந்த பத்திராஜ**
கட்டுப்பாட்டாளர் நாயகம்
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,
சுஹுருபாயா,
பத்தரமுல்லை.

# உள்ளடக்கம்


01. **அத்தியாயம் - நிறுவனத்தின் விபரம்**

| | | |
|---|---|---|
| 1.1 | அறிமுகம் | 06 |
| 1.2 | நோக்கு, செயற்பணி, நிறுவனத்தின் குறிக்கோள்கள் | 07 |
| 1.3 | பிரதான பணிகள் | 07 |
| 1.4 | நிறுவனக் கட்டமைப்பு | 08 |
| 1.5 | திணைக்களத்தின் பிரதான பிரிவுகள் மற்றும் கிளைகள் | 09 |

02. **அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்**

| | | |
|---|---|---|
| 2.1 | 2025 ஆம் ஆண்டில் அடையப் பெற்ற முன்னேற்றம் | 10 |
| 2.2 | செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் வருமான உழைப்பின் முன்னேற்றம் | 44 |
| 2.3 | விசேட வெற்றிகள் | 47 |
| 2.4 | சவால்கள் | 48 |
| 2.5 | எதிர்கால இலக்குகள் | 48 |

03. **அத்தியாயம் - 2025 டிசம்பர் 31 திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை** 50

04. **அத்தியாயம் - குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள்** 65

05. **அத்தியாயம் - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDG)** 68

06. **அத்தியாயம் - மனித வள விபரம்** 70

07. **அத்தியாயம் - இணக்கப்பாட்டு அறிக்கை** 71

# நிறுவனத்தின் விபரம்

# 01 அத்தியாயம்

## 1.1 அறிமுகம்

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், 1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தினாலும் அதனோடு தொடர்புடைய திருத்தங்கள் மற்றும் 1956 ஆம் ஆண்டின் குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்திற்கு அமைய ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய திருத்தங்களினாலும் குடியுரிமையை வழங்கும் சட்ட ஏற்பாடுகளினாலும் உரித்தாக்கப்பட்டுள்ள சட்டத் தத்துவங்களின் கீழ் இயங்கி வருகின்றது.

தேசியப் பாதுகாப்பை உறுதிசெய்த வண்ணம் இலங்கைப் பிரஜைகள் அல்லாதோர் இலங்கைக்குள் உட்பிரவேசிப்பதையும் நாட்டிலிருந்து வெளியேறுவதையும் கட்டுப்படுத்தல், ஒழுங்குமுறைப்படுத்தல், வெளிநாட்டவர்களுக்கு வீசா அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல், வெளிநாட்டில் இலங்கையரின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கைப் பிரஜைகளுக்கு கடவுச்சீட்டுக்களை வழங்குதல், வெளிநாடுகளில் பிறக்கும் இலங்கைப் பிரஜைகளின் பிள்ளைகளுக்கு இந்நாட்டுக் குடியுரிமையை வழங்குதல், இலங்கையின் குடியுரிமைக்காக விண்ணப்பிக்கும் ஆட்களுக்கு இந்நாட்டுக் குடியுரிமையை வழங்குதல் முதலான பிரதான பணிகள் இத்திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுகின்றன. அத்தோடு நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சேவைப் பெறுநர்களுக்கு மிகவும் வினைத்திறன்மிக்க நட்புறவுடன் கூடிய சேவையை வழங்குவதற்காக பணியாட் தொகுதியினர் எப்போதும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகின்றனர்.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் நாட்டுக்கு வருமானத்தை ஈட்டிக்கொடுக்கும் பாரிய பணியில் ஈடுபட்டுவரும் திணைக்களமாகும். 2025 ஆம் ஆண்டில் 44.88 பில்லியன் ரூபா தொகையை தேசிய வருமானத்திற்கு ஈட்டிக்கொடுப்பதற்கு இயலுமாகியது.

**சட்டத் தத்துவங்கள்**

- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு.
- 1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க குடியுரிமைச் சட்டமும் அதற்கான திருத்தங்களும்.
- 1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டமும் அதற்கான திருத்தங்களும்.
- 1949 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க இந்தியா மற்றும் பாகிஸ்தான் குடியிருப்பாளர்களின் குடியுரிமை தொடர்பான சட்டம்.
- 1967 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க இந்திய - இலங்கை உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கான சட்டமும் அதற்கான திருத்தங்களும்.
- 1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க நாடற்றோருக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான சட்டம்.
- 2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இந்திய வம்சாவளி மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான சட்டம்.
- 2008 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சீன வம்சாவளி மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான சட்டம்.
- மேற்குறிப்பிடப்பட்ட சட்டங்களுடன் தொடர்புடைய ஒழுங்குவிதிகளும் கட்டளைகளும்.
- குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகளும் அறிவுறுத்தல்களும்.

## 1.2 நோக்கு, செயற்பணி மற்றும் நிறுவனத்தின் குறிக்கோள்கள்

### நோக்கு

பிராந்தியத்தில் முன்னோடி குடிவரவு மற்றும் குடியகல்வு சேவையாகத் திகழ்தல்.

### செயற்பணி

தேசியப் பாதுகாப்பையும் சமூக விழுமியங்களையும் பேணிப் பாதுகாத்தல் மற்றும் பொருளாதார அபிவிருத்திற்கான வாய்ப்புகளை வழங்கிய வண்ணம் நாட்டிலிருந்து வெளியேறுவோரையும் நாட்டிற்குள் வருவோரையும் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் குடியுரிமை சேவைகளை வழங்குதல்.

### இலக்குகள்

- தேசிய பாதுகாப்பு விடயத்தில் பிரதான தரப்பொன்றாக செயற்படுதல்.
- சர்வதேச தரநியமங்களின் பிரகாரம் பெயர் குறிக்கப்பட்ட இறங்குதுறைகள் ஊடாக சட்ட ரீதியாக நாட்டிற்குள் பிரவேசிப்பதையும் நாட்டிலிருந்து வெளியேறுவதையும் வினைத்திறன்மிக்க வகையில் முகாமை செய்தல்.
- இலங்கையரின் அடையாளத்தை வெளிநாடுகளில் உறுதிப்படுத்தல்.
- சேவை பெறுனர்களுக்கு தரமான மற்றும் வினைத்திறன்மிக்க சேவைகளை வழங்குவதனூடாக அரசாங்கத் துறையில் மிகச் சிறந்த நிறுவனமாகத் திகழ்தல்.

## 1.3 பிரதான பணிகள்

- இலங்கைப் பிரஜைகள் அல்லாதோர் இலங்கைக்குள் உட்பிரவேசிப்பத்தைக் கட்டுப்படுத்தல் மற்றும் இலங்கையிலிருந்து வெளியேறுவதை ஒழுங்குமுறைப்படுத்தல்
- இந்த நாட்டில் தங்கியிருக்கும் இலங்கைப் பிரஜைகள் அல்லாதவர்களை மேற்பார்வை செய்தல் மற்றும் இலங்கைப் பிரஜைகள் அல்லாத ஆட்களை இலங்கையிலிருந்து வெளியேற்றுதல்.
- இலங்கைப் பிரஜைகளுக்கு கடவுச்சீட்டுக்களை விநியோகித்தல்.
- வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு வீசா அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல்.
- இலங்கை குடியுரிமையை வழங்குதல் மற்றும் அதற்கு இடைநேர்விளைவான செயற்பாடுகள்.
- இரட்டைக் குடியுரிமையை வழங்குதல் மற்றும் அதற்கு இடைநேர்விளைவான செயற்பாடுகள்.

## 1.4 நிறுவனக் கட்டமைப்பு



## 1.5 திணைக்களத்தின் கீழ் இயங்கும் பிரதான பிரிவுகளும் கிளைகளும்

### கடவுச்சீட்டுப் பிரிவு
- கடவுச்சீட்டுக் கிளை
- கடவுச்சீட்டு தயாரிப்புக் கிளை
- கடவுச்சீட்டு திருத்தும் கிளை
- வெளிநாட்டுத் தூதரக கிளை
- தபால் கிளை
- பிராந்திய அலுவலகங்கள்

### கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்பு பிரிவு
- கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புக் கிளை
- இந்திய இலங்கை குடியுரிமைக் கிளை
- சட்டக் கிளை

### குடியுரிமைப் பிரிவு

### விசாப் பிரிவு
- விசாக் கிளை

### நிதிப் பிரிவு

### IT மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவு
- தகவல் தொழில்நுட்ப பிரிவு
- இறங்கு துறைகள் பிரிவு

### நிர்வாகப் பிரிவு
- நிர்வாகக் கிளை
- பயிற்சி மற்றும் அபிவிருத்திக் கிளை
- கொள்முதல் கிளை
- போக்குவரத்துக் கிளை
- நலன்புரிக் கிளை
- பொதுமக்கள் தகவல் அலகு
- வரவேற்பு கருமபீடம்
- பியஸ் வளாகம்

### புலனாய்வு மற்றும் செயற்பாட்டுப் பிரிவு

### உள்ளக கணக்காய்வுப் பிரிவு

# முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

02 அத்தியாயம்

## 2.1 2025 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற முன்னேற்றம்

### 2.1.1 கடவுச்சீட்டுப் பிரிவு

கட்டுப்பாட்டாளர் (கடவுச்சீட்டு) அவர்களின் மேற்பார்வையின் கீழ் இயங்கிவரும் இப்பிரிவானது பொது மக்களுக்கு மிகவும் நெருங்கிய பிரிவாகும். இலங்கையர்களுக்கு தங்கு தடையின்றி வெளிநாடுகளுக்குப் பயணிப்பதற்கும் தங்கியிருப்பதற்கும் திரும்பி வருவதற்கும் ஏற்றவாறு சர்வதேச தரநியமங்களுடன் கூடிய கடவுச்சீட்டு விநியோகிக்கப்படுகின்றது. கடவுச்சீட்டுக்கள் ஒருநாள் சேவை, சாதாரண சேவை என்ற அடிப்படையில் விநியோகிக்கப்படுகின்றன. இந்த சேவைகள் பிரதான அலுவலகத்தினாலும் பிராந்திய அலுவலகங்களினாலும் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தப் பிரிவின் செயற்பாடுகள் அதன் 5 கிளைகள் ஊடாகவும் பிராந்திய அலுவலகங்கள் 5 ஊடாகவும் செயற்படுத்தப்படுகின்றன.

- கடவுச் சீட்டுக் கிளை
- கடவுச்சீட்டு தனிப்பயனாக்கல்
- கடவுச்சீட்டு திருத்தக் கிளை
- வெளிநாட்டு தூதரகக் கிளை
- தபால் கிளை
- பிராந்திய அலுவலகங்கள் - கண்டி, மாத்தறை, குருநாகல், வவுனியா, யாழ்ப்பாணம்

**நோக்கங்களும் செயற்பாடுகளும்**

1. சரியான மற்றும் உண்மையான தகவல்கள் அடங்கிய கடவுச்சீட்டை இலங்கையர்களுக்கு வழங்கும் பொருட்டு வழிமுறைகளைப் பின்பற்றுதல்.
2. இலங்கையின் கடவுச்சீட்டினது தரத்தை பாதுகாப்பதற்கும் விருத்திசெய்வதற்கும் ஏற்புடைய கொள்கைகளை அமுல்படுத்தல்.
3. இலங்கையர்களின் குடிவரவு மற்றும் குடியகல்வு நடவடிக்கைகள் தொடர்பிலான நீதிமன்ற உத்தரவுகளை அமுல்படுத்தல்.
4. இலங்கையர்களின் குடிவரவு மற்றும் குடியகல்வு நடவடிக்கைகளுக்கு ஏற்புடைய அரச பாதுகாப்புப் பிரிவுகள் மற்றும் அரச நிறுவனங்களுடன் சிறந்த ஒருங்கிணைப்புடன் செயற்படுதல்.

#### 2.1.1.1 கடவுச்சீட்டு தனிப்பயனாக்கல் கிளை

கடவுச்சீட்டுக் கிளையிடமிருந்தும் வெளிநாட்டுத் தூதரகக் கிளையிடமிருந்தும் புதிய கடவுச்சீட்டுக்களைத் தயாரிப்பதற்காக இக்கிளைக்கு கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்கள் உரிய பரீட்சித்தல்களுக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் ஒருநாள் சேவையின் கீழ் வழங்கப்படும் கடவுச்சீட்டுக்கள் கடவுச்சீட்டு விநியோக கருமபீடத்திற்கும் சாதாரண சேவையின் கீழ் விநியோகிக்கப்படுகின்ற கடவுச்சீட்டுக்கள் தபால் கிளைக்கும் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு அனுப்ப வேண்டிய கடவுச்சீட்டுக்கள் வெளிநாட்டுத் தூதரகக் கிளைக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

மேலும், திருத்தல் நடவடிக்கைகளுக்கு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்புடைய பரீட்சித்தலின் பின்னர் தரவுகளைப் பதிதல் (Data Entry), அத்தரவுகளை மீண்டும் பரீட்சித்தல் (Validate), அச்சிடப்பட்ட கடவுச்சீட்டுகளில் மாற்றங்கள், அவதானிப்புகள் இருப்பின் அவற்றை 3 ஆம் பக்கத்தில் (Observation Print), அச்சிடுதல்.

இந்தச் செயன்முறைக்கு மேலதிகமாக புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இணைய வழியில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்கு கடவுச்சீட்டு அச்சிடும் செயன்முறையின் போது விண்ணப்பங்களைப் பரிசோதித்தல், அதற்குரிய Barcode உடன் கூடிய இலக்கத்தை அச்சிடுதல், கடவுச்சீட்டை அச்சிடல் உள்ளிட்ட அனைத்து கட்டங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.1.1.2 கடவுச்சீட்டு தயாரிப்புக் கிளை

இந்தப் பிரிவு, கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் சமர்ப்பிக்கும் கோரிக்கைகளின் அடிப்படையில், வழங்கப்பட்ட கடவுச்சீட்டுகளுக்கு இணங்க, பல்வேறு பிரிவுகளின் கீழ் கடவுச்சீட்டுகளில் திருத்தங்களை இணைக்கும் பணியை மேற்கொள்கிறது.

### 2.1.1.3 வெளிநாட்டுத் தூதரகக் கிளை

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களுக்கான கடவுச்சீட்டுக்கள் இந்தக் கிளையினால் விநியோகிக்கப்படுகின்றன. குறித்த நாட்டில் அமைந்துள்ள வெளிநாட்டுத் தூதரகத்தினூடாக சமர்ப்பிக்கப்படும் கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு ஊடாக இந்தத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அவ்வாறு அனுப்பப்படுகின்ற விண்ணப்பங்களுக்கான புதிய கடவுச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு மீண்டும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டு வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கைத் தூதரங்களூடாக உரிய விண்ணப்பதாரிகளிடம் சேர்ப்பிக்கப்படுகின்றன.

### 2.1.1.4 தபால் கிளை

சாதாரண சேவையின் கீழ் ஒப்படைக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு தயாரிக்கப்படுகின்ற கடவுச்சீட்டுக்களை தாமதமின்றி பதிவுத் தபால் மூலம் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பி வைப்பதே இந்தப் பிரிவின் பிரதான பணியாகும்.

### 2.1.1.5 பிராந்திய அலுவலகங்கள்

மாத்தறை, கண்டி, வவுனியா, குருணாகல் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்கள் அமைந்துள்ளதோடு, சாதாரண சேவை மற்றும் ஒருநாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டு விநியோகம் மற்றும் கடவுச் சீட்டுக்களில் திருத்தங்களை மேற்கொள்ளும் பணிகள் அவற்றின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

## கடவுச் சீட்டு விநியோகித்தலில் அடையப்பெற்ற முன்னேற்றம் - 2025

**2.1** அட்டவணை : 2025 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அனைத்துவிதமான கடவுச் சீடடுக்களின் எண்ணிக்கை

| இராஜதந்திர | உத்தியோகபூர்வ | சகல நாடுகளுக்கும் | அவசர சான்றிதழ் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 376 | 1,145 | 776,773 | 934 | 779,228 |

**2.2** அட்டவணை : பிராந்திய அலுவலகங்கள் மூலம் வழங்கப்பட்ட கடவுச் சீட்டுக்களின் எண்ணிக்கை

| அலுவலகம் | கடவுச்சீட்டுக்களின் எண்ணிக்கை |
|---|---|
| கண்டி | 44,207 |
| மாத்தறை | 41,518 |
| குருணாகல் | 40,796 |
| வவுனியா | 30,622 |
| யாழ்ப்பாணம் | 8,447 |

**2.3** அட்டவணை : 2025 ஆம் ஆண்டில் இணைய வழியில் விநியோகிக்கப்பட்ட கடவுச்சீட்டுக்களின் எண்ணிக்கை

| அவசர சேவை | சாதாரண சேவை | மொத்தம் |
|---|---|---|
| 4,461 | 26,847 | 31,308 |

## 2.1.1.2 கடவுச்சீட்டு திருத்தக் கிளை

**2.4** அட்டவணை : 2025 ஆம் ஆண்டில் பிரதான அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும் கடவுச் சீட்டு திருத்தங்கள்

| வகை | மொத்தம் |
|---|---|
| ஒரு வெளிநாட்டுப் பயணத்திற்கு மாத்திரம் செல்லுபடியாக்கல் | 130 |
| தனிவழிப் பயணக் கட்டுப்பாட்டை இரத்துச் செய்தல் | 2,960 |
| இரட்டைப் பிரஜாவுரிமையை உள்ளடக்குதல் | 165 |
| தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளடக்குதல் | 7,065 |
| திருமணத்திற்கு முன்னரான பெயரை இடுதல் | 4,813 |
| முதற் பெயர் / வேறு பெயர் மாற்றம் செய்தல் | 339 |
| திருமணத்திற்கு பின்னரான பெயரை இடுதல் | 3,689 |
| வேறு பெயர் திருத்தங்கள் | 54 |
| வேறு திருத்தங்கள் 01 | 3,689 |
| வேறு திருத்தங்கள் 02 | 54 |
| திருமணத்திற்கு முன்னரான முதற் பெயரை உள்ளடக்குதல் | 3 |
| பதவியை உள்ளடக்குதல் / பதவியை நீக்குதல் | 7,604 |

## 2.1.1.3 வெளிநாட்டுத் தூதரகக் கிளையின் முன்னேற்றம்

**2.5** அட்டவணை **:** 2025 ஆம் ஆண்டில் இந்தக் கிளையின் மூலம் பதிவுசெய்யப்பட்ட, அனுமதிக்கப்பட்ட மற்றும் விநியோகிக்கப்பட்ட கடவுச்சீட்டுக்களின் எண்ணிக்கை

| மாதம் | பதிவுசெய்யப்பட்ட | அனுமதிக்கப்பட்ட | விநியோகிக்கப்பட்ட |
|---|---|---|---|
| ஜனவரி | 5,208 | 5,127 | 8,244 |
| பெப்ரவரி | 4,299 | 5,009 | 6,322 |
| மார்ச் | 8,983 | 5,062 | 5,800 |
| ஏப்ரல் | 5,396 | 6.138 | 6,111 |
| மே | 5,208 | 5,185 | 5,343 |
| ஜூன் | 5,224 | 5,350 | 6,327 |
| ஜூலை | 5,648 | 7,019 | 5,715 |
| ஆகஸ்ட் | 6,023 | 6,342 | 6,999 |
| செப்டம்பர் | 4.848 | 6,026 | 6,629 |
| ஒக்டோபர் | 5,253 | 5,514 | 5,079 |
| நவம்பர் | 4,981 | 4,180 | 5,218 |
| டிசம்பர் | 5,167 | 6,087 | 6,451 |
| **மொத்தம்** | **66,238** | **67,039** | **74,238** |

**2020 ஆம் ஆண்டு முதல் 2025 வரை வெளிநாட்டுத் தூதரகக் கிளையினால் விநியோகிக்கப்பட்ட கடவுச் சீட்டுக்களின் எண்ணிக்கை**




## 2.1.2 வீசாப் பிரிவு

1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் III ஆம் பிரிவின் கீழ் இலங்கைப் பிரஜை அல்லாதோர் இலங்கைக்குள் பிரவேசிப்பதை கட்டுப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அந்தச் சட்டத்திற்கு அமைய ஆக்கப்பட்ட 1956 குடிவரவு மற்றும் குடியகல்வு ஒழுங்கு விதிகளில் 02 தொடக்கம் 35 வரையிலான ஒழுங்கு விதிகளின் பிரகாரம் இலங்கையின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கைக்கு வருகைதரும் வெளிநாட்டவர்களுக்கு இந்த நாட்டில் சட்டபூர்வமாகத் தங்கியிருப்பதற்கான வீசா அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல் மற்றும் வீசா நீடிப்பு முதலான பணிகள் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

நாட்டுக்கு வருகைதரும் வெளிநாட்டவர்களுக்க வீசாக்களை விநியோகித்தல் மற்றும் நீடிப்புச் செய்வதன் மூலம் நாட்டுக்கு போதியளவு வருமானத்தை ஈட்டிக் கொடுத்தல் மற்றும் அத்தியவசிய துறைகளில் சேவையில் ஈடுபடுவதற்கு வசதிகளைச் செய்வதன் மூலம் தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல் மற்றும் நாட்டுக்கு சாதகமான வீசா கொள்கைகளை அமுல் செய்தல் என்பன இந்தக் கிளையின் பிரதான நோக்கங்களாகும்.

மேற்கூறப்பட்ட குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டம் மற்றும் அதன் விதிமுறைகளுக்கு இணங்க, இந்த நாட்டிற்கு வரும் வெளிநாட்டவர்களுக்கு வதிவிட / குடியிருப்பு வீசா மற்றும் வதிவு அல்லாத வீசா ஆகிய இரண்டு முக்கிய வீசா வகைகளின் கீழ் இந்தத் திணைக்களத்தினால் வீசாக்கள் வழங்கப்படுகின்றன.

- **வசிப்பதற்கான வீசா**

விசேட நோக்கங்களுக்காக இலங்கையில் நீண்ட காலம் வசிப்பதற்கு உத்தேசிக்கும் பின்வரும் தொகுதிகளைக் கொண்ட இலங்கையர் அல்லாதவர்களுக்கு இவ்வாறான வீசாக்கள் வழங்கப்படுகின்றன.

**01. முதலீட்டு வீசா**

» வெளிநாட்டு முதலீட்டாளர்
» முதலீட்டுக் கம்பனியொன்றின் முதலீட்டாளர்

**02. தொழில் வீசா**

» இலங்கை அரசின் கீழ் கருத்திட்டங்களில் தொழில் புரிவோர்
» முதலீட்டுச் சபையின் கீழ் கருத்திட்டங்களில் சேவையில் ஈடுபட்டுள்ளோர்.
» கொழும்பு துறைமுக நகர் பொருளாதார ஆணைக்குழுவின் கீழ் தொழில் புரிவோர்
» தனியார் கம்பனிகளில் பணியாற்றும் ஊழியர்கள்

**03.** சமய அலுவல்கள் வீசா

- மத குருமார்
- மத செயற்பாட்டாளர்கள்
- மத வழிபாட்டுத் தளங்களை நிர்மாணிப்பவர்கள் /பணிவிடை செய்பவர்கள்

**04.** கல்வி வீசா

- மாணவர்கள் / ஆசிரியர்கள்
- அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களின் மாணவர்கள்/ ஆசிரியர்கள்

**05.** அரச சார்பற்ற நிறுவனங்கள் அல்லது சர்வதேச அரச சார்பற்ற நிறுவன வீசா

- மேற்படி அமைப்புக்களின் பிரதிநிதிகள்

**06.** மருத்துவ வீசா

- இலங்கை நாட்டில் மருத்துவ சிகிச்சைகளை உத்தேசிக்கும் ஆட்கள்

**07.** நீதிமன்ற வழக்குகள்

- நீதிமன்ற வழக்குகளில் தோற்றும் ஆட்கள்

**08.** பதிவுபெற்ற இந்தியர்கள்

- 1967 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் இந்தியப் பிரஜையாகப் பதிவுசெய்துள்ள எவரேனும் ஆள் - நீடிப்பு மாத்திரம்

**09.** இராஜதந்திர மற்றும் கடமை

- இராஜதந்திர அல்லது கடமை நிமித்தம் வருகைத்தரும் தூதரக பிரதிநிதிகளுக்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சிபாரிசின் பேரில் கட்டணம் இன்றி வீசா வழங்குதல் மற்றும் நீடித்தல்.

**10.** கொழும்பு துறைமுக நகர் பொருளாதார ஆணைக்குழு வீசா

- துறைமுக நகர் ஆணைக்குழுவின் வசிப்பவர்கள் (புதிய)
- துறைமுக நகர் ஆணைக்குழு வியாபாரம்

**11.** டிஜிட்டல் சுற்றுலா வீசா

- டிஜிட்டல் சுற்றுலாப் பயணிகள், அதாவது நிரந்த சேவை நிலையம் இன்றி ஜீவனோபாயத்திற்காக டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துபவர்கள்

**12. இலங்கைப் பிரஜை ஒருவரின் உறவினருக்கு**

- வெளிநாட்டு வாழ்க்கைத்துணை
- வெளிநாட்டுத் துணையின்/ தங்கி வாழ்பவரின் தந்தை / தாய்
- (மரணமடைந்த) இலங்கைப் பிரஜை ஒருவரின் வெளிநாட்டு வாழ்க்கைத் துணை (மீண்டும் திருமணம் செய்து கொள்ளாதவராக இருப்பின்).
- மரணமடைந்த வெளிநாட்டு / இலங்கைப் பிரஜையின் வாழ்க்கைத் துணையைச் சார்ந்திருக்கும் பிள்ளைகள் (22 வயது வரை).
- (349 ஆம் அதிகாரம்) பிரஜாவுரிமைச் சட்டத்தின் 19, 20 அல்லது 21 ஆம் பிரிவுகளின் கீழ் இலங்கைப் பிரஜாவுரிமை இடைநிறுத்தப்பட்ட ஆளொருவர்.
- வெளிநாட்டுப் பிரஜாவுரிமை கொண்ட இலங்கைப் பெற்றோரின் பிள்ளைகள் (22 வயது வரை).
- வெளிநாட்டுப் பெற்றோர்கள் / மாமனார் / மாமியார்.
- இலங்கைப் பிரஜை ஒருவரின் வெளிநாட்டு பாதுகாவலர்
- மரணமடைந்த, முன்னைய இலங்கைப் பிரஜைகளான விதவைகள்
- (349 ஆம் அதிகாரம்) பிரஜாவுரிமைச் சட்டத்தின் 19, 20 அல்லது 21 ஆம் பிரிவுகளின் கீழ் இலங்கைப் பிரஜாவுரிமை இரத்துச் செய்யப்பட்ட, விவாகரத்து பெற்ற ஒருவரின் பிள்ளைகள் (22 வயது வரை).
- இலங்கைப் பிரஜை ஒருவரின் இலங்கையர் அல்லாத தங்கி வாழ்வோர்

**13. விருந்தினர் வீசா (RGS)**

- தற்போதுள்ள வீசா நீடிப்பு மாத்திரம்

**14. எனது கனவு வீடு வீசா (SSRV)**

- தற்போதுள்ள வீசா நீடிப்பு மாத்திரம்

- **வசிப்பதற்கு அல்லாத வீசா** (Non -Resident Visa)

குறுகியகால தேவைகளுக்காக இந்த நாட்டுக்கு வருகைத்தருவதற்கு விநியோகிக்கப்படும் வீசா வகையாகும். அதனை வருகைத்தந்து அல்லது இணைய வழியில் பெற்றுக்கொள்ள முடியும். வருகைத்தரு வீசா சுற்றுலா மற்றும் வியாபாரம் என இரு வகைப்படும்.

- **வருகைத்தரு வீசா** (Visit Visa)

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் மற்றும் இலத்திரனியல் பயண அங்கீகாரத்தின் (ETA) கீழ் சுற்றுலா மற்றும் வியாபார நோக்கங்களுக்காக குறுகியகால வீசா வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

**01. குறுகியகால வியாபார நடவடிக்கைகளுக்கு**

- இந்த வீசாக்கள் சுற்றுலா அல்லாத குறுகிய கால வணிக நோக்கங்களுக்காக இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இதற்காக, தொடர்புடைய பணியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (உதாரணம். வர்த்தக கலந்துரையாடல்கள் / நிறுவன செயலமர்வுகள்)

**02.** பலமுறை நுழைவு விசா - வணிகம் (Multiple Entry Visa Business)

» இந்த வீசா ஒரு வருட காலத்திற்கு வணிக நோக்கத்திற்காக இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்படுகிறது, மேலும் இந்த வீசாவைப் பெற்று இலங்கையில் தங்குவதற்கான அதிகபட்ச காலம் 180 நாட்கள் ஆகும்.

**03.** சுற்றுலா நோக்கத்துக்கான வீசா

பின்வரும் செயற்பாடுகளுக்கு இலங்கையில் பயணம் செய்வதற்கு குறுகியகாலத்திற்கு வருகைத் தரும் வெளிநாட்டவர்களுக்கு இலத்திரனியல் பயண அனுமதியின் கீழ் 30 நாட்களுக்கான வீசா வழங்கப்படுகின்றது.

» MICE - சுற்றுலா நடவடிக்கைகள் - முதலீட்டு கருத்தரங்குகள் / கண்காட்சிகள் / நிகழ்ச்சிகள் / ஜம்போரி
» ஆயுர்வேத மருத்துவ சிகிச்சைப் பெற்றுக்கொள்வதற்காக - ஹேர்பல்
» கலை, சங்கீதம் மற்றும் நடன நிகழ்ச்சிகளில் பங்கேற்றல்
» யாத்திரிகை / விளையாட்டு நிகழ்ச்சிகள் / திருமண வைபவங்களில் பங்கேற்றல்
» சுற்றுலா அல்லது விடுமுறையைக் கழித்தல்
» நன்பர்கள் மற்றும் உறவினர்களை தரிசித்தில்

- **இடைத்தங்கல் வீசா** (Transit Visa)

இலங்கைக்கு வெளியே ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு பயணம் செய்யும் போது இலங்கைக்குள் நுழைவதற்கு வழங்கப்படும் வீசா ஆகும். இது அதிகபட்சம் 2 நாட்களுக்கு உட்பட்டு இலவசமாக வழங்கப்படுகின்றது.

- இரண்டு நாட்களுக்கு இலங்கை வழியாக வேறொரு இடத்திற்கு பயணிக்கும் பயணிக்கு இலவசமாக இடைதங்கல் வீசா வழங்கப்படுகிறது.
- இலங்கை துறைமுகம் ஒன்றின் ஊடாக பயணிக்கும் கப்பலின் மூலம் இலங்கைக்கு 04 நாள் விஜயம் மேற்கொள்வதற்காக இடைத்தங்கல் வீசா வழங்குவதற்கு 25 USD கட்டணம் அறவிடப்படுகின்றது.
- இலங்கை கடற்பரப்பில் உள்ள கப்பலின் வணிகக் கடற்படைக் குழுவினருக்கு 30 நாட்களுக்குக் கரைக்கு வருவதற்குக் கடற்கரை அனுமதி இலவசமாக வழங்கப்படும். அவர்கள் அதற்கு மேலும் தங்கினால், எதிர்வரும் 02 மாதங்களுக்கு மாதாந்த கட்டணமாக USD 25 செலுத்தி கடற்கரை அனுமதிப் பத்திரத்தை நீடித்துக்கொள்ள முடியும். வருகைத் தந்த நாளிலிருந்து 05 மாதங்களுக்கு மேல் தங்குவதாயின் அதற்காக வீசா பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட வீசாக்களை வழங்குவது தேசியப் பாதுகாப்பு தொடர்பில் பரிசீலனைக்கு எடுக்கப்படும் தீர்மானங்களின் அடிப்படையில் வீசா வழங்கும் தற்போதைய முறையைப் பின்பற்றுதல் மற்றும் பாதுகாப்பு அனுமதி அறிக்கைகளைப் பெறுதல் மற்றும் அமைச்சரவையின் முடிவுகளின்படி வதிவிட வீசாவுக்கு சுகாதார அமைச்சின் சுகாதாரத் திட்டத்தைப் பெற்றுக்கொள்ளல் என்பன தொடர்ந்தும் அமுலில் இருக்கும்.

- **நிரந்தர வதிவிட விசா** (Permanent Residence)

இரட்டைக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்க முடியாத இலங்கைப் பிரஜாவுரிமையைப் பெற்றிருந்த நபர்களுக்கு இலங்கைப் பிரஜையின் வெளிநாட்டு வாழ்க்கைத் துணை மற்றும் வெளிநாட்டுப் பிள்ளைகளுக்கு நிரந்தர வதிவிட வீசா வழங்குவதற்கான விதிமுறைகள் தயாரிக்கப்பட்டுள்ளதோடு, மேற்படி முறைமைக்கு அமைய வீசா வழங்கும் செயன்முறையை மிக விரைவில் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்படுகின்றது.

## 2025 ஆம் ஆண்டில் வீசாப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்

**1.** Bay of Bengal Initiative for Multi-Sectoral Technical and Economic Cooperation (BIMSTEC) **விசா விவகாரங்கள் குறித்த ஐந்தாவது நிபுணர் குழு கூட்டம் 2025 நவம்பர் 18 மற்றும் 19 ஆகிய திகதிகளில் கொழும்பில் நடைபெறுதல்.**




Bay of Bengal Initiative for Multi-Sectoral Technical and Economic Cooperation (BIMSTEC) என்பது வங்காள விரிகுடாவைச் சார்ந்த நாடுகளான பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மியான்மர், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய 07 உறுப்பு நாடுகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு பிராந்திய அமைப்பாகும். பிராந்திய ரீதியிலான தொடர்புகள் மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில், உறுப்பு நாடுகளுக்கிடையிலான விசா நடைமுறைகளை முறைப்படுத்தவும் எளிமைப்படுத்தவும் இந்த அமைப்பினால் விசா விவகாரங்கள் குறித்த நிபுணர் குழுவொன்று நிறுவப்பட்டுள்ளது.




2025 ஆம் ஆண்டிற்காக அதனை நடத்தும் நாடாக இலங்கை பெயரிடப்பட்டிருந்தமையால், விசா விவகாரங்கள் குறித்த நிபுணர் குழுவின் 5 ஆவது கூட்டத்தை ஏற்பாடு செய்யும் பொறுப்பு குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, விசா பிரிவினால் இக்கூட்டத்தை நடத்துவதற்கான அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

2025 நவம்பர் 18 மற்றும் 19 ஆகிய திகதிகளில் கொழும்பு Courtyard by Marriott ஹோட்டலில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அனைத்து உறுப்பு நாடுகளினதும் சிரேஷ்ட அதிகாரிகள் கலந்துகொண்டதுடன், இந்நாடுகளுக்கிடையிலான விசா விவகாரங்கள் மற்றும் மக்களுக்கிடையிலான உறவுகளை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.




கூட்டத்தின் முதல் நாளில் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் தலைமையில் ஆரம்ப அமர்வு நடைபெற்றது. கூட்டத் தொடரைத் தொடர்ந்து, அன்றைய தினம் மாலை பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரின் பங்கேற்புடன் இராப்போசன விருந்து ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இரண்டாம் நாள் கூட்டத்தின் நிறைவில் நகர சுற்றுப்பயணம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



இக்கூட்டத்தின் அனைத்துப் பணிகளும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.




**2. முதலீட்டாளர் பிரிவின் கீழ் முதலாவது விசாவை வழங்குதல்.**

2023.11.27 திகதிய 2360/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தப்பட்ட குடிவரவு மற்றும் குடியகல்வு ஒழுங்குவிதிகளின்படி, வதிவிட விசா (Residence Visa) பிரிவின் கீழ் முதலீட்டாளர் பிரிவில் பின்வருமாறு விசாக்களை வழங்குவதற்கான வழிகாட்டல்கள் 2025 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டன..

- 100,000 அமெரிக்க டொலர்களுக்கு 05 ஆண்டுகள்.
- 200,000 அமெரிக்க டொலர்களுக்கு 10 ஆண்டுகள்.

இந்த முதலீட்டாளர் விசா பிரிவு தொடர்பான வழிகாட்டுதல்களைத் தயாரிப்பதில் இலங்கை மத்திய வங்கி தனது பங்களிப்பை வழங்கியது. அதற்கமைய, இதன்கீழ் முதலாவது விசா 2025.10.01 ஆம் திகதி கௌரவ பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரின் தலைமையில் வழங்கப்பட்டது.



**3. டிஜிட்டல் நோமட் (Digital Nomad) பிரிவின் கீழ் விசா வழங்குவதற்கான வழிகாட்டுதல்களைத் தயாரித்தல்.**

2023.11.27 ஆம் திகதிய 2360/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தப்பட்ட குடிவரவு மற்றும் குடியகல்வு ஒழுங்குவிதிகளின்படி, வதிவிட விசா பிரிவின் கீழ் டிஜிட்டல் நோமட் (Digital Nomad) பிரிவில் விசா வழங்குவதற்கான வழிகாட்டல்கள் 2025 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டன.

இந்த விசா பிரிவு தொடர்பான வழிகாட்டல்களைத் தயாரிப்பதில் டிஜிட்டல் அமைச்சின் பங்களிப்பு பெறப்பட்டதுடன், விசாக்களை வழங்கும்போது டிஜிட்டல் அமைச்சின் பரிந்துரைகளை வழங்குவதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.




**4. குடிவரவரவு மற்றும் குடியகல்வு ஒழுங்குவிதிகளைத் திருத்துதல்.**

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் ஆலோசனையின் பேரில், தற்போதுள்ள விசா பிரிவுகள் மற்றும் விசா நடைமுறைகளை ஆய்வு செய்து பரிந்துரைகளை வழங்குவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அதற்கமைய, 2023.11.27 ஆம் திகதிய 2360/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட விசா பிரிவுகள் மற்றும் அதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த விசா பிரிவுகளை ஆய்வு செய்து, தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப விசா பிரிவுகளை அடையாளம் காணவும் விசா நடைமுறைகளை எளிமைப்படுத்தவும் குறித்த குழு உறுப்பினர்களால் கலந்துரையாடப்பட்டது. 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள், கலந்துரையாடப்பட்ட தகவல்கள் அடங்கிய ஆவணங்கள் தயார் செய்யப்பட்டன.

## 2025 ஆம் ஆண்டில் வீசா பிரிவின் முன்னேற்றம்

**2,037,248**
ETA அனுமதியை வழங்குதல் (On Line)

**268,104**
ETA அனுமதியை வழங்குதல் (On Arrival)

**22,861**
வசிப்பதற்கான வீசாக்களை வழங்குதல்

**20,251**
வசிப்பதற்கான வீசாக்களை நீடித்தல்

**57,886**
குறுகிய கால அடிப்படையில் வீசாக்களின் காலத்தை நீடித்தல்

**1,857**
இரட்டைக் குடியுரிமையைப் பெற்றுக்கொள்வதன் காரணமாக வீசா தேவையிலிருந்து விடுவித்தல் (இலங்கையர்)

## 2019 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரை இலத்திரனியல் பயணி அனுமதியை வழங்குதல், புதிய வீசா விநியோகம் மற்றும் நீடிப்புச் செய்தல் தொடர்பிலான முன்னேற்றம்.















## வசிப்பதற்கான வீசாக்களை நீடித்தல் மற்றும் விநியோகித்தல் பற்றிய விரிவான குறிப்பு - 2025

| # | வசிப்பதற்கான வீசா வகைகள் | நீடித்தல் | விநியோகித்தல் | தூதரகங்களுக்கு அனுப்பப்பட்ட தொலைநகல் செய்திகள் | விமான நிலையங்களுக்கு அனுப்பப்பட்ட செய்திகள் |
|---|---|---|---|---|---|
| 01 | முதலீட்டு வகை | 02 | 05 | - | - |
| 02 | முதலீட்டு வகை - B | 01 | 02 | - | - |
| 03 | முதலீட்டு வகை - C | 46 | 05 | 01 | - |
| 04 | முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் (BOI) | 2,850 | 1,860 | 2,171 | 67 |
| 05 | தனியார் துறையில் பணிபுரிபவர்கள் | 4,595 | 7,438 | 4,661 | 225 |
| 06 | அரசாங்கத் துறை (Public Sector) | 1,140 | 1,053 | 1,150 | 277 |
| 07 | கொழும்பு துறைமுக நகரம் | 900 | 4,059 | 250 | 6,005 |
| 08 | மதகுருமார்கள் | 769 | 396 | 337 | 51 |
| 09 | மதத் தொழிலாளர்கள் | 75 | 115 | 142 | 15 |
| 10 | கல்விசார் | 2,046 | 1,387 | 1,169 | 147 |
| 11 | சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் (INGO) | 289 | 177 | 179 | 31 |
| 12 | அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGO) | 80 | 01 | 58 | 10 |
| 13 | மருத்துவ காரணங்களுக்காக வருகை தந்தவர்கள் | 1,009 | 289 | - | - |
| 14 | நீதிமன்ற உத்தரவுகள் | 261 | 101 | - | - |
| 15 | பதிவு செய்யப்பட்ட இந்தியர்கள் | 05 | - | - | - |
| 16 | உத்தியோகபூர்வ கடமை சார்ந்த (Duty) | 216 | 285 | 245 | 30 |
| 17 | இராஜதந்திர விசா (Diplomatic) | - | - | 299 | 28 |
| 18 | இலங்கைத் தந்தை/தாய்க்குப் பிறந்த பிள்ளைகள் | 176 | 257 | - | - |
| 19 | பிரஜாவுரிமைச் சட்டத்தின் 5.2 பிரிவின் கீழ் | 1,857 | - | - | - |
| 20 | பிரஜாவுரிமைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் | | - | - | - |
| 21 | முன்னாள் இலங்கையர்கள் | 2,373 | 3,640 | - | - |
| 22 | இலங்கை பிரஜைகளின் வாழ்கைத்துணைகள் (கணவன்/மனைவி) | 3,205 | 1,696 | - | - |
| 23 | பணியில் உள்ள வெளிநாட்டுத் வாழ்க்கைத் துணைகள் | 08 | 01 | - | - |
| 24 | இலங்கை பிரஜைகளைச் சார்ந்திருப்பவர்கள் (Dependents) | 10 | 05 | - | - |
| 25 | இலங்கைப் பிள்ளைகளின் பெற்றோர் | 38 | 26 | - | - |
| 26 | கொழும்பு துறைமுக நகரம் (வணிகம்) | - | - | - | 04 |
| 27 | டிஜிட்டல் நோமட் | 02 | - | - | - |
| 28 | விருந்தினர் வதிவிடத் திட்டம் | 02 | - | - | - |
| 29 | கோல்டன் பெரடைஸ் | 01 | - | - | - |
| 30 | எனது கனவு இல்லம் | 151 | 03 | - | - |
| 31 | சார்க் விசா (SAARC Visa) | - | 103 | - | - |
| 32 | கூட்டு ஆதனம் | 1 | 0 | 0 | 9 |
| 33 | நிர்மாணத் துறை | - | - | - | 01 |
| | **மொத்தம்** | **22,108** | **22,801** | **10,662** | **6,900** |

| வீசா வகை | எண்ணிக்கை |
|---|---|
| குடியுரிமைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் | 301 |
| இரட்டைக் குடியுரிமை | 1,783 |
| குடியுரிமைச் சட்டத்தின் 5.2 பிரிவின் கீழ் | 1,442 |
| இராஜதந்திர | 307 |
| அரச சார்பற்ற நிறுவனங்கள் (INGO) | 19 |
| கடமை | 18 |

## 2.1.3 IT மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவு

### 2.1.3.1 தகவல் தொழில்நுட்பக் கிளை

தற்போது பயன்பாட்டிலுள்ள மென்பொருள் முறைமைகளையும், வன்பொருள் முறைமைகளையும் தடையின்றி பேணிச் செல்வதும் பொது மக்களுக்கு உயரிய சேவைகளை வழங்குவதும் புதிய தொழில்நுட்ப முறைமைகளை அறிமுகம் செய்த வண்ணம் தகவல் முறைமையை விருத்தி செய்வதும் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் பிரதான பணிகளாகும்.

அதே போன்று, இந்தத் திணைக்களத்தின் கணினி முறைமைக்கான சேவைகளை வழங்கும் வெளி நிறுவனங்களுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்களை உரியவாறு இற்றைப்படுத்தல், ஒப்பந்தங்களின் பிரகாரம் நடவடிக்கைகளை பேணிச் செல்லல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்பனவும் இந்தப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்ற மற்றும் சில பணிகளாகும்.

மேலும், அரசாங்க அமைச்சுகள், திணைக்களங்கள், நீதிமன்றங்கள், பாதுகாப்பு பிரிவுகள் (பொலிஸ் மற்றும் ஆயுதப்படைகள்), நியதிச்சட்ட சபைகள், ஆணைக்குழுக்கள், அரச வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் உட்பட பல்வேறு நிறுவனங்களிடமிருந்து பல்வேறு நபர்களின் வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பான அறிக்கைகள் கோரப்பட்டுள்ளன. இந்தத் திணைக்களத்தின் தரவு அமைப்பிலிருந்து நிறுவனங்களுக்கு இப்பிரிவால் தகவல்கள் வழங்கப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக, பின்வரும் முக்கிய பணிகளும் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன.

1. பொதுமக்களின் தேவைகளுக்கு ஏற்ப கணினி மென்பொருள் மற்றும் மொடியுலர் அபிவிருத்திக்கு தேவையான தொழில்நுட்ப உதவியை வழங்கி சேவையை பயனுள்ள வகையில் மேம்படுத்தல்.
2. திணைக்களத்தின் இணையத்தளத்தை இற்றைப்படுத்தல்.
3. பயன்பாட்டிலுள்ள வன்பொருட்கள் மற்றும் மென்பொருள் தொகுதியை தரமுயர்த்தல் (Upgrade).
4. நீதிமன்ற கட்டளைகளுக்கு அமைய பயணிகளின் விமானப் பயண நடவடிக்கைகளை இற்றைப்படுத்தல்.

   இந்தப் பணி தற்போது இந்தத் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெறும் நீதிமன்றக் கட்டளைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் இந்தப் பணியில் ஏற்படக்கூடிய தாமதங்களைத் தவிர்ப்பதற்காக ஏற்புடைய Interface Development மூலம் விமானப் பயணங்களைத் தடை செய்யும் பணியை நீதிமன்றத்திற்கே வழங்குவதற்கு Central Black List கருத்திட்டம் மேம்படுத்தப்பட்டு வருகின்றது. இது 2025 ஆம் ஆண்டில் நிறைவடையும்.
5. கட்டுப்பாட்டாளர் (கடவுச்சீட்டு) அவர்களின் உத்தரவுக்கு அமைய கடவுச்சீட்டுக்களை கறைநிரலில் (Black List) சேர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

## 2025 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற முன்னேற்றம்

**01. நீதிமன்ற உத்தரவுகளுக்கு அமைவாக பயணிகளின் வான்வழிப் பயணம் தொடர்பான நடவடிக்கைகளை இற்றைப்படுத்தல்**

» பயணத் தடை விதித்தல், தடையை முழுமையாக நீக்குதல் மற்றும் தற்காலிகமாக நீக்குதல் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்பட்ட நீதிமன்ற உத்தரவுகளின் எண்ணிக்கை - 66,323

» பயணத் தடைகள் குறித்து பரிசோதிக்கப்பட்ட எண்ணிக்கை - 14,280

**02. கடவுச்சீட்டுகளை கறுப்புப் பட்டியலில் (Blacklist) சேர்த்தல் மற்றும் நீக்குதல்**

» கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்ட கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கை - 15,174

» கறுப்புப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கை - 509

» கறுப்புப் பட்டியலில் சேர்க்காமல் கடவுச்சீட்டுகளில் இருந்து தேசிய அடையாள அட்டை (NIC) விபரங்களை மட்டும் நீக்கியமை - 547

» கடவுச்சீட்டுகளை முடக்குதல் மற்றும் மீண்டும் செயற்படுத்துதல் - 1,236

**03. அரச அமைச்சுகள், திணைக்களங்கள், நீதிமன்றங்கள், பொலிஸ் மற்றும் முப்படை, ஆணைக்குழுக்கள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களினால் கோரப்பட்ட பல்வேறு நபர்களின் வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பாக வழங்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை** - 31,883

**04.** காணாமல் போன மற்றும் திருடப்பட்ட கடவுச்சீட்டுகள் பிரிவு **(SLTD)**

காணாமல் போன மற்றும் களவாடப்பட்ட கடவுச்சீட்டுக்கள் தொடர்பில் பொலிஸ் நிலையங்கள் மூலம் வழங்கப்படும் தகவல்கள் மத்திய தகவல் பணியகத்தினால் அல்லது வெளிநாட்டு தூதரகங்கள் மூலம் நேரடியாக தகவல்கள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்படுகின்றன. அவற்றைப் புலனாய்வு செய்து அவற்றை மீண்டும் பயன்படுத்த முடியாத வண்ணம் இரத்துச்செய்து சர்வதேச பொலிசுக்கு (INTER-POL) அறிவிக்கப்படும்.

» 2025.01.01 முதல் 2025.12.31 வரை மத்திய தகவல் பணியகம் மற்றும் வெளிநாட்டுத் தூதரகங்களினால் அனுப்பப்பட்டு, திணைக்கள தரவு அமைப்பில் உள்ளீர்க்கப்பட்ட கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கை - 2,505

**05.** ஒருங்கிணைந்த தகவல் முகாமைத்துவப் பிரிவு **(IEMS)**

குடிவரவு, குடியகல்வு தகவல்கள் மற்றும் புள்ளிவிபரத் தரவுகளை வழங்குவதற்காக இணைந்த தகவல் முகாமைத்துவப் பிரிவு (IEMS) நிறுவப்பட்டுள்ளது.

» 2025.01.01 முதல் 2025.12.31 ஆம் திகதி வரை இந்த அலகு (IEMS) மூலம் தூதரகங்கள் மற்றும் உயர் ஸ்தானிகள் ஆலயங்களுக்குப் பதில் அளிக்கப்பட்ட வினவல்கள் பற்றிய தகவல்கள்

| நிறுவனம் | எண்ணிக்கை |
|---|---|
| புது டில்லியில் அமைந்துள்ள நேர்வே நாட்டின் தூதரகம் | 05 |
| அமெரிக்க தூதரகம் | 21 |
| அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் ஆலயம் | 31 |
| கனடா உயர்ஸ்தானிகள் ஆலயம் | 130 |
| ஐக்கிய இராச்சியத்தின் உயர்ஸ்தானிகர் ஆலயம் | 118 |
| இலங்கை உயர்ஸ்தானிகர் ஆலயம் - பிரித்தானியா | 15 |
| இலங்கை மத்திய வங்கியின் புலனாய்வுப் பிரிவு | 50 |
| மொத்தம் | 370 |

## 06. மீண்டும் பொறுப்பேற்கும் பிரச்சினை முகாமைத்துவ அமைப்பு (RCMS)

வெளிநாடொன்றில் இருந்து நாடுகடத்தப்படும் இலங்கையர்களின் இலங்கை குடியுரிமையை அந்தந்த நாடுகளில் நிறுவப்பட்டுள்ள தூதரகங்கள் மூலம் உறுதிப்படுத்திய பின்னர், கணினி அமைப்பின் ஊடாக எமது திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படும். அந்த அமைப்பின் மூலமாகவே, திணைக்களத்திலுள்ள தரவுகள் மற்றும் ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தின் தரவுகள் ஆகியவற்றை உபயோகித்து, இறுதியாக அந்த நபரின் இலங்கை குடியுரிமை உறுதிப்படுத்தப்படும். அதன் பின்னர், தற்காலிக பயண ஆவணமொன்றை வழங்குவதற்கான பரிந்துரை வழங்கப்படும்

» 2025.01.01 ஆம் திகதி முதல் 2025.12.31 ஆம் திகதி வரை இந்த திணைக்களத்தினால் ஆட்கள் இலங்கையர்கள் என்பதை உறுதிப்படுத்தி தற்காலிக பயண ஆவணங்களை தயாரிப்பதற்காக இலங்கைத் தூதரகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| நாடு | RCMS அமைப்பின் மூலம் இலங்கையர் என்பது பரிந்துரைக்கப்பட்ட எண்ணிக்கை 2025.12.31 ஆம் திகதிக்கு |
|---|---|
| அவுஸ்திரேலியா | 51 |
| ஒஸ்ரியா | 02 |
| பஹ்ரேன் | 48 |
| பெல்ஜியம் | 06 |
| கனடா | 52 |
| சீனா | 36 |
| கியுபா | 04 |
| துபாய் | 1,309 |
| எகிப்து | 04 |
| பின்லாந்து | 01 |
| பிரான்ஸ் | 104 |
| ஜேர்மன் | 79 |
| கிரீஸ் | 08 |
| இந்தியா | 442 |
| இந்தோனேஷியா | 10 |
| ஈரான் | 05 |
| இஸ்ரேல் | 07 |
| இத்தாலி | 114 |
| ஜப்பான் | 74 |
| ஜோர்தான் | 20 |
| கென்யா | 05 |
| தென் கொரியா | 04 |

| நாடு | RCMS அமைப்பின் மூலம் இலங்கையர் என்பது பரிந்துரைக்கப்பட்ட எண்ணிக்கை 2025.12.31 ஆம் திகதிக்கு |
|---|---|
| குவைட் | 3,587 |
| லெபனான் | 21 |
| மலேசியா | 279 |
| மாலைத்தீவு | 32 |
| நேபாளம் | 10 |
| நெதர்லாந்து | 17 |
| ஓமான் | 790 |
| பாகிஸ்தான் | 16 |
| போலாந்து | 09 |
| கட்டார் | 300 |
| ருமேனியா | 14 |
| ரஷ்யா கூட்டமைப்பு | 62 |
| சவூதி அரேபியா | 1,523 |
| சிங்கப்பூர் | 07 |
| ஸ்லோவெகியா | 02 |
| சுவீடன் | 13 |
| சுவிட்சர்லாந்து | 114 |
| தாய்லாந்து | 69 |
| துருக்கி | 17 |
| ஐக்கிய இராச்சியம் | 62 |
| ஐக்கிய அமெரிக்கா | 56 |
| **மொத்தம்** | **9,385** |

### 2.1.3.2 இறங்கு துறைகள் கிளை

இலங்கைப் பிரஜைகள் அல்லாதவர்கள் இலங்கைக்குள் நுழைவதைக் கட்டுப்படுத்தல், அத்தகைய கடவுச்சீட்டுக்கள் வைத்திருப்பவர்களை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதை முறைமைப்படுத்தல், இலங்கை கடவுச்சீட்டை வைத்துள்ள ஒட்டுமொத்த குடிவருவோர் மற்றும் குடியகல்வோரின் தடைநீக்க நடவடிக்கைகளை வினைத்திறனுடன் பயன்மிக்க வகையில் தேசியப் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கி நாட்டின் பொருளாதாரத்திற்கு நேர்மறையாக ஊக்கமளித்து இலங்கையைச் சூழவுள்ள அனைத்து செயற்பாட்டிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களின் பணிகளை மேற்கொள்வது இந்தக் கிளையின் பிரதான பணியாகும். அதற்குத் தேவையான பௌதீக மற்றும் மானிட ஆதரவு சேவைகளை வழங்குதல், முழு வாடிக்கையாளர் தளத்தையும் ஒருங்கிணைத்தல். மேலும், இலங்கையில் வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் வீசா பிரிவுகள் நிறுவப்படாத வெளிநாடுகளுக்கு இலங்கை கடவுச்சீட்டுகளை கூரியர் மூலம் அனுப்புவதற்கு தேவையான சட்ட அதிகாரத்தை குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகம் சார்பில் வழங்குதல். அரசாங்க மற்றும் பகுதியளவு அரசாங்க நிறுவனங்களுக்கு சட்ட அமுலாக்கலுக்குத் தேவைப்படும் எல்லைக் கட்டுப்பாட்டுத் தகவல்களை தேவையான அடிப்படையில் வழங்குதல்.

## 2.1.3.3 அனுமதிக்கப்பட்ட துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள்

1. கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்
2. மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் - மத்தல
3. கொழும்பு சர்வதேச விமான நிலையம் - இரத்மலானை
4. கொக்கல விமான நிலையம்
5. யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம்
6. மட்டக்களப்பு சர்வதேச விமான நிலையம்

1. கொழும்பு துறைமுகம்
2. காலி துறைமுகம்
3. திருகோணமலை துறைமுகம்
4. ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகம்
5. தலைமன்னார் ஜெட்டி
6. நுரைச்சோலை துறைமுகம்
7. ஒலுவில் துறைமுகம்
8. காங்கேசன்துறை துறைமுகம்
9. கொழும்பு துறைமுக நகர விசேட பொருளாதார வலயம்

### ஒவ்வொரு இறங்கு துறைகள் ஊடாகவும் வருகைத்தந்த மற்றும் வெளியேறிய ஆட்களின் எண்ணிக்கை - 2025






## இலங்கைக்கு வருகைத்தந்த மற்றும் வெளியேறிய இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை மாதாந்தம் - 2025

| மாதம் | வருகைத்தந்தோர் | | வெளியேறியோர் | |
|---|---|---|---|---|
| | இலஙகைப் பிரஜைகள் | வெளிநாட்டவர்கள் | இலங்கைப் பிரஜைகள் | வெளிநாட்டவர்கள் |
| ஜனவரி | 127,663 | 276,369 | 131,652 | 296,048 |
| பெப்ரவரி | 105,220 | 260,078 | 125,920 | 267,226 |
| மார்ச் | 127,124 | 247,202 | 126,183 | 264,970 |
| ஏப்ரல் | 150,968 | 195,902 | 144,074 | 222,015 |
| மே | 134,567 | 153,283 | 136,995 | 170,907 |
| ஜூன் | 140,818 | 159,358 | 121,862 | 140,198 |
| ஜூலை | 156,415 | 227,509 | 139,865 | 189,323 |
| ஆகஸ்ட் | 142,985 | 224,134 | 166,266 | 261,132 |
| செப்டம்பர் | 125,278 | 180,345 | 168,637 | 189,738 |
| ஒக்டோபர் | 127,295 | 189,208 | 142,393 | 186,260 |
| நவம்பர் | 142,684 | 238,190 | 139,971 | 216,368 |
| டிசம்பர் | 158,320 | 288,907 | 144,224 | 233,786 |
| மொத்தம் | 1,639,337 | 2,640,485 | 1,688,042 | 2,637,971 |

## இலங்கைக்கு வருகைத்தந்த மற்றும் வெளியேறிய இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை மாதாந்தம் - 2025



## இலங்கையிலிருந்து வெளியேறிய இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை மாதாந்தம் - 2025




| | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலங்கைப் பிரஜைகள் | 131,652 | 125,920 | 126,183 | 144,074 | 136,995 | 121,862 | 139,865 | 166,266 | 168,637 | 142,393 | 139,971 | 144,224 |
| வெளிநாட்டவர்கள் | 296,048 | 267,226 | 264,970 | 222,015 | 170,907 | 140,198 | 189,323 | 261,132 | 189,738 | 186,260 | 216,368 | 233,786 |

## இலங்கைக்கு வருகைத்தந்த வெளிநாட்டவர்கள் பிராந்தியங்களுக்கு அமைய - 2025

| | |
|---|---|
| ஆபிரிக்கா | 24,973 |
| ஆசியா | 1,096,409 |
| அவுஸ்திரேலியா | 161,705 |
| ஐரோப்பா | 1,210,469 |
| வட அமெரிக்கா | 139,538 |
| தென் அமெரிக்கா | 5,951 |
| அடையாளம் காணப்படாத | 1,440 |



## 2.1.4 புலனாய்வுக் கிளை

1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டம் மற்றும் அதன் கீழ் ஆக்கப்பட்ட 1956 குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் ஒழுங்குவிதிகள் மற்றும் சர்வதேச சமவாயங்களுக்கு இணங்காத வெளிநாட்டவர்கள் மற்றும் நாட்டுக்கு அச்சுறுத்தலாக உள்ள வெளிநாட்டவர்கள் இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கு முன்னர், பிரவேசிக்கும் போது மற்றும் இலங்கையில் தரித்திருக்கும் போது அத்தகைய வெளிநாட்டவர்களை அடையாளம் காணல், அவர்களின் செயற்பாடுகளை கண்காணித்தல், குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தை மீறி இலங்கையில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களை கைதுசெய்தல், தடுத்து வைத்தல், அவர்களை நாட்டிலிருந்து வெளியேற்றுதல் அல்லது நாடுகடத்தல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளல், மேற்கூறப்பட்ட குற்றங்களை தடுப்பதற்கு முனைப்புடன் செயற்படுதல் மற்றும் அதனோடு தொடர்புடைய சட்ட நடவடிக்கைகளை எடுத்தல் என்பன இந்தப் பிரிவின் பிரதான பணிகளாகும்.

**2.6 அட்டவணை :** 2025 புலனாய்வுச் செயற்பாடுகள் மூலம் புலனாய்வுக்கு உட்படுத்தப்பட்ட மொத்த வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை

| மாதம் | வெளிக்கள கண்காணிப்பு | தொலைதூரக் கண்காணிப்பு | பரிசோதிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கை | மேலதிக விசாரணை க்காக சமர்ப்பிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| ஜனவரி | 41 | 129 | 170 | 39 |
| பெப்ரவரி | 45 | 104 | 149 | 37 |
| மார்ச் | 171 | 110 | 281 | 108 |
| ஏப்ரல் | 185 | 94 | 279 | 117 |
| மே | 121 | 103 | 224 | 90 |
| ஜூன் | 56 | 109 | 165 | 51 |
| ஜூலை | 248 | 125 | 373 | 245 |
| ஆகஸ்ட் | 60 | 117 | 177 | 43 |
| செப்டம்பர் | 84 | 150 | 234 | 84 |
| ஒக்டோபர் | 98 | 195 | 293 | 87 |
| நவம்பர் | 31 | 126 | 157 | 22 |
| டிசம்பர் | 56 | 172 | 228 | 56 |
| மொத்தம் | 1,196 | 1,534 | 2,730 | 979 |

**புலனாய்வுப் பிரிவினால் வருடாந்தம் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகளின் எண்ணிக்கை (2018-2025)**



» 2025 ஆம் ஆண்டுக்கு அமைவாக, தடுப்புக்காவல் கட்டளை பிறப்பிக்கப்பட்ட 928 வெளிநாட்டவர்கள் மிரிஹான மற்றும் வெலிசர தடுப்பு நிலையங்களில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அவர்களுள் 735 பேர் நாட்டை விட்டு அகற்றும் மற்றும் நாடுகடத்தும் கட்டளைகளின் கீழ் இந்நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளதுடன், புலனாய்வு/விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட ஏனைய வெளிநாட்டவர்களில் 279 பேர் இந்நாட்டிலிருந்து வெளியேறுவதற்கான அறிவித்தல்களின் பிரகாரம் வெளியேற்றப்பட்டுள்ளனர். அதற்கமைய, இவ்வருடத்தினுள் மொத்தம் 1014 வெளிநாட்டவர்கள் இந்நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

**2.7 அட்டவணை : 2025 ஆம் ஆண்டில் புலனாய்வுப் பிரிவின் செயற்பாடுகள் காரணமாக விசாரணை செய்யப்பட்ட வெளிநாட்டர்களின் எண்ணிக்கை**

| நாடு | வெளியேற்றுவதற்கான கட்டளை வழங்குதல் மற்றும் நாடுகடத்தல் | வெளியேறுமாறு அறிவித்தல் | மொத்த வெளி யேற்றல் |
|---|---|---|---|
| வங்காளதேசம் | 160 | 30 | 190 |
| சீனா | 144 | - | 144 |
| இந்தியா | 323 | 233 | 556 |
| மலேசியா | 1 | 1 | 2 |
| உக்ரைன் | 4 | - | 4 |
| அமெரிக்கா | 1 | - | 1 |
| மடகாஸ்கர் | 7 | - | 7 |
| தாய்லாந்து | 9 | - | 9 |
| ஈரான் | 3 | - | 3 |
| மாலைத்தீவு | - | 3 | 3 |
| கொலம்பியா | 1 | - | 1 |
| நேபாளம் | - | 1 | 1 |
| பிரித்தானியா | 2 | 2 | 4 |
| பிரான்ஸ் | 1 | - | 1 |
| பாகிஸ்தான் | 16 | 5 | 21 |
| பிலிப்பைன்ஸ் | 4 | - | 4 |
| ரஷ்யா | 12 | - | 12 |
| வியட்நாம் | 18 | - | 18 |
| இத்தாலி | 1 | - | 1 |
| ஜப்பான் | 2 | - | 2 |
| கென்யா | 1 | - | 1 |
| நைஜீரியா | 5 | - | 5 |
| அவுஸ்திரேலியா | 3 | 1 | 4 |
| பிரேசில் | 1 | - | 1 |
| ஈராக் | 1 | - | 1 |
| லித்துவேனியா | 1 | - | 1 |
| கஸகஸ்தான் | 1 | - | 1 |
| கொரியா | 1 | - | 1 |
| மொரோக்கோ | 1 | - | 1 |
| நெதர்லாந்து | 1 | 1 | 2 |
| இஸ்ரேல் | 5 | 1 | 6 |
| சோமாலியா | 3 | - | 3 |
| யெமன் | 2 | - | 2 |
| கனடா | - | 1 | 1 |
| மொத்தம் | 735 | 279 | 1,014 |

**01. வெளிநாட்டவர் தடுப்பு நிலையங்கள்**

» குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தை மீறி இலங்கையில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்கள் மற்றும் இலங்கையில் பல்வேறுபட்ட குற்றங்கள் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட வெளிநாட்டவர்களின் சட்ட ரீதியான நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் அந்த வெளிநாட்டவர்களை இந்த நாட்டிலிருந்து அகற்றும் வரையில் தடுத்துவைத்தல் மற்றும் அது வரையில் அவர்களது அடிப்படையில் தேவைகளைப் பூர்த்திசெய்தல் மற்றும் தேவையான மருத்துவ சிகிச்சைகளுக்கு முன்னிலைப்படுத்தல் என்பன இந்த தடுப்பு நிலையங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

» அதற்கமைய, தடுத்து வைத்துள்ளவர்களுக்கு மருத்துவ சிகிச்சை பெற வேண்டிய தேவை ஏற்படும் போது, பணியில் உள்ள உத்தியோகத்தர்கள் அவர்களை மருத்துவமனைகளுக்கு அழைத்துச் சென்று, மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் மருத்துவமனையில் அனுமதித்தல். தேவையான போது மருத்துவ முகாம்களை நடத்துதல் மற்றும் மன்றில் ஆஜர்படுத்தல்.

தற்போது இந்த திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் தடுப்பு நிலையங்கள் இரண்டு காணப்படுகின்றன.

I. மிரிஹானை தடுப்பு முகாம்
II. வெலிசரை தடுப்பு முகாம்

**2.8 அட்டவணை : 2025 ஆம் ஆண்டில் முகாம்களில் அனுமதிக்கப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை**

| தடுப்பு முகாம் | ஆண்டில் முகாம்களில் அனுமதிக்கப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை | | | 2025.12.31 திகதிக்கு தடுத்து வைக்கப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|
| | பெண் | ஆண் | மொத்தம் | பெண் | ஆண் | மொத்தம் |
| மிரிகான | - | - | - | - | - | - |
| வெளிசறை | 9 4 | 834 | 928 | 14 | 86 | 100 |

**02. ஆட்கடத்தலை கட்டுப்படுத்தும் தேசிய வள நிலையம் (NAHTRC)**

ஆட்கடத்தல் வியாபாரத்தை தடுக்கும் தேசிய வள நிலையம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் புலனாய்வுப் பிரிவின் கீழ் இயங்கும் ஒரு அலகாகும்.

» அதன் மூலம் நாட்டினுள் இருக்கும் வெளிநாட்டவர்களுக்கு மற்றும் நாட்டு எல்லைகள் ஊடாக மேற்கொள்ளப்படும் ஆட்கடத்தல் வியாபாரம் மற்றும் மோசடிகள் மற்றும் ஏனைய முறையற்ற குடிப்பெயர்வுகளை அடையாளம் கண்டு அவற்றை தடுப்பதற்கு புலனாய்வுப் பிரிவுக்கு உதவுதல்.

» குடிவரவு மற்றும் குடியகல்வு உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல்.

» மேற்படி நிகழ்வுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களான குற்றப் புலனாய்வுத் திணைக்களம், நீதி அமைச்சு மற்றும் தேசிய ரீதியில் நிறுவப்பட்டுள்ள பாதுகாப்பு அமைச்சினால் வழிநடாத்தப்படும் ஆட்கடத்தல் வியாபாரத்தை தடுக்கும் செயலணிக்கு தகவல்களை இற்றைப்படுத்தல் மற்றும் தேவையான ஒருங்கிணைப்பை பேணிவரல்.

» அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட "ஆட்கட்டத்தல் வியாபாரம் பற்றிய அறிக்கைக்கு" குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் வருடாந்தம் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் தகவல்ளை பாதுகாப்பு அமைச்சினூடாக அறிவித்தல்.

» விமான நிலையங்களில் குடிவரவு மற்றும் குடியகல்வு பிரிவு மற்றும் விசேடமாக எல்லைக் கண்காணிப்பு அலகுடன் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல்.

» வெளிநாட்டு குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளுடன் புலனாய்வுத் தகவல்களைப் பரிமாற்றம் செய்துகொள்ளல், அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் ஆட்கடத்தல் மற்றும் மனித வியாபாரத்தை தடுத்தல் தொடர்பிலான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

வருடாந்தம் அகதிகள் அந்தஸ்துகோருதல் மற்றும் அகதிகள் அந்தஸ்து கோரி இந்த நாட்டில் தங்கியுள்ளவர்கள் (2014 - 2025)




## 03. இடர் மதிப்பீட்டு நிலையம்

» 2019 ஆம் மே மாதத்தில் புலனாய்வுப் பிரிவின் கீழ் நிறுவப்பட்ட இந்த நிலையத்தின் மூலம் எல்லைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய புலனாய்வுத் தகவல்களை சேகரித்தல், தயாரித்தல், திட்டமிடல் மற்றும் பகுப்பாய்வு செய்வதன் மூலம் இலங்கைக்கு வருகைதர உத்தேசிக்கும், நாட்டுக்குள் பிரவேசிக்கும், நாட்டினுள் தங்கியிருக்கும் மற்றும் இலங்கையிலிருந்து வெளியேறும் ஆபத்தான பயணிகள் மற்றும் அவர்களது போக்குகளை முன்னரே இனங்காண்பதன் மூலம் அவர்கள் நாட்டுக்குள் வருவதை அல்லது வெளியேறுவதை தடுத்தல் மற்றும் அந்தத் தகவல்களை பாதுகாப்புடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களுடன் பரிமாற்றிக்கொள்வது இந்த இடர் மதிப்பீட்டு நிலையத்தின் பணியாகும். அதற்கமைய, குறுகியகால மற்றும் நீண்டகால குடிவரவு மற்றும் குடியகல்வு பாதுகாப்பு மற்றும் புலனாய்வு மூலோபாயங்களை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கு இந்த தரவுகள் பயனுள்ளதாக ஈடுபடுத்தப்படும்.

**2.9 அட்டவணை :** அபாய மதிப்பீட்டு நிலையத்தின் மூலம் 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அபாய மதிப்பீடு

| நாடு | விண்ணப்பித்த மொத்த எண்ணிக்கை | பரிசோதிக்கப்பட்ட எண்ணிக்கை | மறுக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|
| பாகிஸ்தான் | 56,312 | 13,680 | 192 |
| நேபாளம் | 7,892 | 3,065 | 394 |
| ஆப்கானிஸ்தான் | 497 | 488 | 434 |
| மடகாஸ்கர் | 211 | 92 | 12 |
| கொலம்பியா | 877 | 315 | 40 |
| மொத்தம் | 65,789 | 17,640 | 1,072 |

» 2025 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட 65,789 விசா விண்ணப்பங்களில், 17,640 விசா விண்ணப்பங்கள் அபாய மதிப்பீட்டு மையத்தினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், அவற்றுள் அபாயகரமான 1,072 விசா விண்ணப்பங்களுக்கு விசா வழங்க வேண்டாம் எனப் பரிந்துரைக்கப்பட்டு விசா பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## 04. எல்லைக் கண்காணிப்பு அலகு

» திட்டமிடப்பட்ட குற்றச் செயலாகக் கருதப்படும் ஆட்கடத்தல் வியாபாரம் மற்றும் வீசா முறைகேடுகளை புலனாய்வு செய்வதற்குத் தேவையான உதவியை வழங்கும் நோக்கில் 2017 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுக்கு அமைய மேற்படி அலகு 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை (BIA) மையப்படுத்தி நிறுவப்பட்டது.

**2.10 அட்டவணை : 2025 ஆம் ஆண்டில் எல்லை கண்காணிப்பு அலகின் ஊடாக மேற்பார்வை செய்யப்பட்ட எண்ணிக்கை**

| தரவுத்தளம் | எண்ணிக்கை |
|---|---|
| போலியான ஆவணங்களை அடையாளம் காணல் | 197 |
| செயற்பாடுகளின் அறிக்கை | 117 |
| முறையற்ற குடிப்பெயர்வுகள் | 76 |
| பயணிகள் மற்றும் ஆவணங்களை சமர்ப்பித்தல் | 2,420 |
| மொத்தம் | 2,810 |

**2.11 அட்டவணை : 2025 வருடத்தில் அடையாளம் காணப்பட்ட போலியான கடவுச்சீட்டுக்கள்**

| நாடு | அடையாளம்காணப்பட்ட போலியான அடையாள அட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|
| பிரேஸில் | 01 |
| கனடா | 01 |
| ஜக்கிய அரபு அமீரகம் | 01 |
| மியன்மார் | 01 |
| இந்தோனேசியா | 01 |
| கானா | 01 |
| ஸ்பெயின் | 02 |
| கசகஸ்தான் | 02 |
| பிரித்தானியா | 03 |
| இத்தாலி | 03 |
| பிரான்ஸ் | 04 |
| மலேசியா | 04 |
| இந்தியா | 05 |
| சீனா | 10 |
| இலங்கை | 28 |
| மொத்தம் | 67 |

**2.12 அட்டவணை : 2025 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்ட போலியான வீசாக்கள்**

| நாடு | அடையாளம் காணப்பட்ட போலி வீசா |
|---|---|
| பெல்ஜியம் | 01 |
| கோத்தமாலா | 01 |
| ஜப்பான் | 01 |
| கிரீஸ் | 01 |
| மலேசியா | 01 |
| சேர்பியா | 02 |
| போலாந்து | 02 |
| ஈரான் | 04 |
| வடக்கு மெசடோனா | 05 |
| பிரான்ஸ் | 05 |
| பிரித்தானியா | 08 |
| கனடா | 16 |
| இத்தாலி | 18 |
| மொத்தம் | 66 |

## 2025 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்ட குடிப்பெயர்வு போக்குகள்

- சுற்றுலா விசா மூலம் இந்நாட்டுக்கு வருகை தரும் சீனப் பிரஜைகள், பல்வேறு இணையவழி (Online) மோசடிகளில் ஈடுபடும் போக்கு கண்டறியப்பட்டுள்ளது.
- பாகிஸ்தானியர்கள் இலங்கை ஊடாக எகிப்து மற்றும் லிபியாவிற்குள் நுழைந்து, மத்திய தரைக்கடல் வழியாக ஐரோப்பாவிற்கு புலம்பெயரும் புதியதொரு போக்கு கண்டறியப்பட்டுள்ளதுடன்.
- இலங்கையர்கள் பனாமா கடல்சார் மாலுமி ஆவணங்களை (Panama CDC) பயன்படுத்தி, மாலுமிகளைப் போல் நடித்து பிரித்தானியாவிற்கு புலம்பெயரும் வாய்ப்புகள் கண்டறியப்பட்டுள்ளன.
- புதுடில்லியினால் வழங்கப்படும் கிரீஸ் நாட்டுக்கான விசாக்களை போலி வழிகளில் பயன்படுத்தி, இலங்கை சுற்றுலாப் பயணிகள் ஐரோப்பாவிற்கு புலம்பெயர முயற்சித்தல்.
- ருமேனியப் பெண்கள் போலியான திருமணத் துணைகளாக நடித்து இலங்கையர்களுக்கு உதவுவதன் மூலம், ஐரோப்பிய விசாவின் கீழ் குறிப்பாக பிரித்தானியாவிற்கு புலம்பெயரும் வாய்ப்புகள் கண்டறியப்பட்டுள்ளன.
- நேபாளப் பெண்கள் மத்திய கிழக்கில் சட்டவிரோத வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்காக, இலங்கை ஊடாக குவைத்திற்குப் புலம்பெயர்தல்.
- இலங்கையர்கள் இணையவழி வேலைவாய்ப்புகளை எதிர்பார்த்து மியன்மார் மற்றும் கம்போடியாவிற்குப் புலம்பெயர்வதும், மனிதக் கடத்தல்களுக்கு உள்ளாவதும், குறிப்பாக சைபர் குற்ற மையங்களின் பிடிக்குள் சிக்குப்படுவதும் கண்டறியப்பட்டுள்ளது.

## 2.1.5 கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புப் பிரிவு

கட்டுப்பாட்டாளர் (கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்பு) / பிரதி ஆணையாளர் (இந்தியா - இலங்கை) அவர்களின் மேற்பார்வையின் கீழ் கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புக் கிளை, இந்திய - இலங்கைப் பிரஜைகள் கிளை, சட்டக் கிளை என்பன இயங்கி வருகின்றன.

### 2.1.5.1 கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புப்புக் கிளை

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அபிவிருத்தி மற்றும் கொள்கை வகுப்பு நடவடிக்கைகளை நன்கு திட்டமிட்ட அடிப்படையில் சீராக அமுல் செய்யும் நோக்குடன் இந்தக் கிளை நிறுவப்பட்டுள்ளது. இப்பிரிவினால் நிறைவேற்றப்படும் பிரதான பணிகள்:

01. திணைக்களத்தின் பிரதான பணிகளை நிறைவேற்றுவதுடன் தொடர்புடைய கொள்கைகளை / திட்டங்களை வகுத்தல்.
02. திணைக்களத்திற்குரிய சட்டதிட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ளல்.
03. உள்ளக சுற்றறிக்கைகள், நடவடிக்கை முறைகளைத் தயாரித்து வெளியிடுதல், வழிகாட்டல் கையேடுகளைத் தயாரித்தல் மற்றும் இற்றைப்படுத்தல்.
04. வருடாந்த செயல் திட்டத்தை (Action Plan) தயாரித்தல் மற்றும் அதை நடைமுறைப்படுத்த ஏற்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
05. கடந்த ஆண்டுக்குரிய செயலாற்றுகை அறிக்கையைத் தயாரித்தல்.
06. ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்ப வேண்டிய மாதாந்த மற்றும் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் உரிய திகதியில் அந்த நிறுவனங்களுக்கு அனுப்புதல்.
07. நிரல் அமைச்சின் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் கொள்கை ரீதியான நடவடிக்கைகளுக்கு ஏற்புடைய கடமைகளை ஒருங்கிணைத்தல்.
08. திணைக்கள தேவைப்பாடுகளுக்கு அமைய அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்து, அதற்கு அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் வேறு அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புரைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
09. பாராளுமன்றத்தில் வாய்மொழியாக பதில்களை எதிர்பார்த்து வினவப்படும் கேள்விகளுக்கு பதில்களைத் தயாரித்தல்.
10. திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் விசேட கருத்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் வருடாந்தம் மேற்கொள்ளப்படும் மூலதனக் கருத்திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு, ஒருங்கிணைப்பு, வழிநடாத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

### 2.1.5.2 இந்திய இலங்கை குடியுரிமைக் கிளை

1949-ஆம் ஆண்டின் 03-ஆம் இலக்க இந்திய மற்றும் பாகிஸ்தானிய வசிப்போர் (குடியுரிமை) சட்டம், 1967-ஆம் ஆண்டின் 14-ஆம் இலக்க இந்திய-இலங்கை ஒப்பந்த (செயல்படுத்தல்) சட்டம், 1988-ஆம் ஆண்டின் 39-ஆம் இலக்க நாடற்றோர் குடியுரிமை வழங்கும் சட்டம், மற்றும் 2003-ஆம் ஆண்டின் 35-ஆம் இலக்க இந்திய வம்சாவளியினர் குடியுரிமை வழங்கும் சட்டம் ஆகியவற்றின் கீழ் தகுதிகளைப் பூர்த்தி செய்யும் நபர்களுக்கு, அச்சட்டங்கள் நடைமுறைக்கு வந்த தேதிகளிலிருந்து இலங்கைக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இலங்கை வசிப்போருக்குக் குடியுரிமை வழங்குவதும், அது தொடர்பான பணிகளைச் செய்வதும் இந்தப் பிரிவின் பங்காகும்.

**2.13 Table :** பதிவு பற்றிய தகவல்களை உறுதிப்படுத்தும் கடிதங்களை வழங்குதல் 2021- 2025

| சட்டம் | 2021 | 2022 | 2023 | 2024 | 2025 |
|---|---|---|---|---|---|
| 1949 இல. 03 | 29 | 148 | 297 | 66 | 43 |
| 1967 இல. 14 | 25 | 158 | 294 | 64 | 45 |
| 1988 இல. 39 | 14 | 52 | 182 | 78 | 19 |
| 2003 இல. 35 | - | 15 | 07 | 03 | 05 |

**2.14 Table :** 2025 வருடத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட மூலதனக் கருத்திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

| # | கருத்திட்டம் | ஒதுக்கீடு (ரூ. மில்) | நிதிச் செலவினம் (ரூ.மில்) | நிதி முன்னேற்றம் | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| 1 | Reconstruction of Vavuniya Holiday Resort | 4 | - | 0% | 5% |
| 2 | Reconstruction of Office Building at Colombo Port | 4.2 | 3.74 | 90% | 100% |
| 3 | Reconstruction of Restroom PlatformKatunayake | 1.1 | 1.1 | 100% | 100% |
| 4 | Construction of a Restroom for Male Authorized Officers at Welisara Foreigner Detention Centre | 3.5 | 3.38 | 95% | 100% |
| 5 | Construction of a Restroom for Female Authorized Officers at Welisara Foreigner Detention Centre | 3.5 | 3.38 | 95% | 100% |
| 6 | Preparation of Storage Facilities for e-Passports | 6 | - | 0% | 10% |
| 7 | Fencing and Motor Bike Park | 2 | 1.61 | 80% | 100% |
| 8 | Internal arrangements for proposed passport office Jaffna | 5.9 | 6.85 | 100% | 100% |
| 9 | Staff toilets & Public toilets for proposed passport office Jaffna | 2.1 | 2.15 | 100% | 100% |
| 10 | Shifting branch for proposed passport office Jaffna | 0.12 | 0.14 | 100% | 100% |
| 11 | Establishment of Suhurupaya Police post | 1 | 0.81 | 81% | 100% |
| 12 | Patition work at piyasa | 0.8 | - | 0% | 100% |
| 13 | Waiting Canopy for proposed passport office Jaffna | 6.1 | 5.34 | 87% | 100% |
| 14 | Renovation of Porch Area in Fourth Storied Building for proposed passport office Jaffna | 2.7 | - | 0% | 0% |
| 15 | Establishment of the office of the Aditional Controller General | 1 | 1 | 100% | 100% |
| 16 | Proposed Renovation of interior of Terminal "D" of passport Division (Step 01 partition work) | 6.14 | - | 0% | 100% |
| 17 | Proposed Renovation of interior of Terminal "D" of passport Division (Step 02 Electrical and Finishing Work) | 5.3 | - | 0% | 100% |
| 18 | Improvement of Plant Machinery and Equipment | 5 | - | 0% | 0% |
| 19 | Improvement of Vehicles | 24.61 | 24.61 | 100% | 100% |
| 20 | Purchasing Office Furniture & Equipment for office requirement | 9.1 | 7.12 | 78% | 100% |
| 21 | Computer & Devies (Without pp printers) for proposed passport office Jaffna | 10.6 | 10.97 | 100% | 100% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 22 | Computer & Devies for Citizen branch & other branches | 4.4 | 0.34 | 8% | 100% |
| 23 | Estimate for Air Conditioners for proposed passport office Jaffna | 3 | 2.91 | 97% | 100% |
| 24 | Estimate for Air Conditioners Vauniya Regional office | 3 | 2.17 | 72% | 100% |
| 25 | BIA Arrival Networking | 30 | - | 0% | 10% |
| 26 | 12 Nos of Finger print scanners | 6 | - | 0% | 50% |
| 27 | Server space upgrade | 35 | 9.4 | 26% | 100% |
| 28 | Purchasing of 14 Printers and 4 photo copy machines | 2.5 | 3.43 | 100% | 100% |
| 29 | 04 Display Units(10-50" TV's & 17 NUC Computers | 2 | - | 0% | 50% |
| 30 | Purchasing of 9 UPS for Kandy, Galle, Kankesanthurai, Palaly, Matara, Vavuniya and Colombo Harbour | 40 | - | 0% | 10% |
| 31 | CCTV Networking | 5 | 5.3 | 100% | 100% |
| 32 | Supply, installation and commissioning of SOPHOS redundant firewall at Bandaranaike International Airport | 15 | - | 0% | 80% |
| 33 | Colombo Harbour Network | 4 | 4 | | 100% |
| 34 | Purchasing IBM Database servers 02 Nos | 410 | - | 0% | 10% |
| 35 | Biomatric Attendence Machines 12 | 2.5 | - | 0% | 50% |
| 36 | Purchasing Documents Scanners 22 Nos | 4.6 | 3.06 | | 100% |
| 37 | Purchasing Barcode Readers 40 Nos | 1.5 | - | 0% | 90% |
| 38 | Purchasing inkjet colour printers 02 Nos | 0.2 | 0.28 | | 100% |
| 39 | ABIS Server | 313.8 | - | 0% | 10% |
| 40 | Internet Networking & power Supply for proposed passport office Jaffna | 4.7 | 4.7 | 100% | 100% |
| 41 | Vavunia networking | 8 | - | 0% | 100% |
| 42 | Purchasing of Passports printers | 746 | - | 0% | 10% |
| 43 | Supply and installation CCTV networking for Regional offices | 4 | - | 0% | 60% |
| 44 | Supply, installation, testing and maintenance of ICAO standard photo capturing software for photo studios | 150 | - | 0% | 10% |
| **45** | **Business Process Re-engeneering** | **150** | - | **0%** | **10%** |
| 46 | Data Migration | 10 | - | 0% | 0% |
| 47 | User Interface upgrade | 10 | - | 0% | 0% |
| 48 | Change Request New | 10 | - | 0% | 0% |
| 49 | Continuation of Change Requests 2024 | 30 | - | 0% | 10% |
| 50 | Windows Server License | 3.3 | 2.89 | 87.50% | 100% |
| 51 | PKI (Public Key Infrastructure) | 557.6 | - | 0% | 70% |
| 52 | Staff Training | 7 | - | 0% | 90% |
| 53 | Blank Travel Documents & related Deliverables | 4000 | - | 0% | 87% |
| 54 | Other capital Expenditure | 50 | - | 0% | 79% |

### 2.1.5.3 சட்டப் பிரிவு

- **நீதிமன்ற நடவடிக்கைகள்**

► கட்டுப்பாட்டாளர் நாயகம் அல்லது திணைக்களத்தின் வேறு உத்தியோகத்தரொருவர் பிரதிவாதியாக பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் வழக்குகளுக்கு ஏற்புடைய அவதானிப்புரைகளை வழங்குதல்.

► கட்டுப்பாட்டுத் தலைமை அதிகாரி அல்லது துறையின் வேறு ஏதேனும் அதிகாரி நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டிருக்கும் வழக்குகளில், உரிய அதிகாரிகள் சம்பந்தப்பட்ட தேதிகளில் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளிப்பதற்குத் தேவையான தகவல்களையும் கோப்புகளையும் தயார் செய்து, அதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

► நீதிமன்ற கட்டளைகளை நடைமுறைப்படுத்த முடியாத, தகவல்கள் பூரணமற்ற நீதிமன்றக் கட்டளைகள் தொடர்பில் அறிவூட்டல் கடிதங்கள் மற்றும் நீதிமன்றங்களுக்கு சமர்ப்பிக்கப்படவேண்டிய 1,838 அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு ஏற்புடைய நீதிமன்றங்களின் பதிவாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இக்காலப்பகுதிக்கு அமைவாக,
புதிய வழக்குகள் **177**
நிலுவையிலுள்ள வழக்குகள்
**237** ஆகியவற்றுக்காகத்
தேவையான நடவடிக்கைகள்
மேற்கொள்ளல்.

•நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்
தகவல் அறிக்கைகள் மற்றும்
நீதிமன்றக் கட்டளைகள் தொடர்பான
அறிவித்தல் கடிதங்கள்
**1,838**

- **உடன்படிக்கைகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகள்**

► இராஜதந்திர மற்றும் உத்தியோகபூர்வ கடவுச் சீட்டுக்களை வைத்திருப்பவர்களுக்காக இருதரப்பு வீசாக்களை விடுவிக்கும் உடன்படிக்கைகளைத் தயாரிப்பதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு பணிகளை வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளல். 2025 ஆம் ஆண்டில் 15 ஒப்பந்தங்களுக்கான திணைக்களத்தின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

► மீள் அனுமதி உடன்படிக்கைகளை (re-admission) தயாரிப்பதற்குத் தேவையன உதவியை வழங்குதல் மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து தேவையான ஒருங்கிணைப்புப் பணிகளில் ஈடுபடல்.

► திணைக்களப் பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையான கட்டிடங்கள், வீடுகள் தொடர்பில் ஏற்புடைய தரப்புக்களுடன் மேற்கொள்ளும் குத்தகை ஒப்பந்தங்களைத் தயாரிப்பதற்கு ஏற்புடைய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

► திணைக்கள நடவடிக்கைகளுடன் தொடர்புடைய பணிகளுக்காக உள்நாட்டு நிறுவனங்களுடன் திணைக்களம் செய்துள்ள ஒப்பந்தங்கள் தொடர்பில் அவதானிப்புரைகளைச் சமர்ப்பித்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய சட்டமா அதிபர் திணைக்களத்துடன் தேவையான ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல்.

- **தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான நடவடிக்கைகள்**

தகவல்கள் வழங்கப்பட்ட
எண்ணிக்கை
**144**

தகவல்கள்
வழங்கப்பட்ட
மேன்முறையீடுகளின்
எண்ணிக்கை
**24**

- **விசேட கடமைகளை நிறைவேற்றல்**

► குடிவரவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டமூலத்தை சட்டமா அதிபரின் அவதானிப்புகளைப் பெற்றுக் கொள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமா்ப்பித்தல்.

► புதிய குடிவரவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டமூலத்திற்கான சட்டமா அதிபரின் சான்றுப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், அந்த சான்றுப்பத்திரத்தின்படி மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களையும் குறிப்பிட்டு, 2026.03.24 ஆம் திகதி பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் ஊடாக சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. மீண்டும் 2026.04.02 ஆம் திகதி சட்ட வரைஞர் திணைக்களத்தினால் சில மேலதிக விடயங்கள் தொடர்பாக அறிவுறுத்தல்கள் கோரப்பட்டுள்ளதுடன், அது குறித்து தற்போது கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

► புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பின் (IOM) ஒத்துழைப்புடன் புதிய குடிவரவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்திற்குரிய ஒழுங்குவிதிகளைத் தயாரிப்பதற்கான ஆரம்பக்கட்டப் பணிகளை மேற்கொள்ளல்.

## 2.1.6 குடியுரிமைப் பிரிவு

குடியுரிமைப் பிரிவின் பணிகள், 1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க குடியுரிமைச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட சட்டரீதியான அதிகாரத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. குடியுரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நிறைவேற்று உத்தியோகபூர்வ அதிகாரம், அது தொடர்பான நிரல் அமைச்சின் கௌரவ அமைச்சருக்குக் கிடைப்பதுடன், அந்த அதிகாரம் அமைச்சின் செயலாளருக்குப் கையளிக்கப்பட்டதன் பின்னர், உரிய அதிகாரங்கள் உதவிச் செயலாளர் ஒருவரினூடாக நடைமுறைப்படுத்தப்பட்டன. தற்போது அந்த அதிகாரங்கள் குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகம் மற்றும் குடியுரிமைப் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் ஒருவரினூடாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன், குடியுரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளும் நிறைவேற்று நடைமுறைகளும், குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தினால் நிர்வகிக்கப்படும் வெளிநாட்டு தூதரகங்கள் ஊடாக கடவுச்சீட்டு வழங்கும் செயல்முறையுடன் நேரடியாகத் தொடர்புபட்டிருப்பதால், குடியுரிமைப் பிரிவு குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ளது.

**2.15 Table :** இரட்டைக் குடியுரிமையைப் பெற்றுக்கொள்ளல் - 2025.01.01 முதல் 2025.12.31 ஆம் திகதி வரை முன்னேற்றம்

| நாடு | இரட்டைக் குடியுரிமையைப் பெற்றுக்கொண்டவர்கள் |
|---|---|
| அவுஸ்திரேலியா | 1,731 |
| கனடா | 898 |
| பிரான்ஸ் | 246 |
| அயர்லாந்து | 29 |
| இத்தாலி | 870 |
| சுவிட்சர்லாந்து | 403 |
| ஐக்கிய இராச்சியம் | 1,493 |
| பீஜீ தீவுகள் | 11 |
| ஜேர்மனி | 101 |
| நெதர்லாந்து | 15 |
| நியுசிலாந்து | 194 |
| நோர்வே | 74 |
| சுவீடன் | 47 |
| ஒஸ்ரியா | 03 |
| பெல்ஜியம் | 24 |
| டென்மார்க் | 43 |
| பின்லாந்து | 21 |
| போலந்து | 05 |
| ரஷ்யா | 04 |
| புனித கிட்ஸ் மற்றும் நேவிஸ் | 03 |
| அமெரிக்கா | 717 |
| வேறு | 51 |
| **மொத்தம்** | **6,983** |

### 1948 ஆம் ஆண்டின் 18 ஆம் குடியுரிமைச் சட்டத்திற்கு அமைய 2025.01.01 முதல் 2025.12.31 வரை முன்னேற்றம்




| | 5 (2) | 8 | 11 | 12 | 19(2) / 19 (3) | 20 |
|---|---|---|---|---|---|---|
| விநியோகிக்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை | 8,348 | 32 | 201 | 14 | 10,248 | 159 |
| விநியோகிக்கப்பட்ட சான்றிதழ் பிரதிகளின் எண்ணிக்கை | 7,269 | 8 | 109 | 8 | 6,983 | 117 |

■ விநியோகிக்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை ■ விநியோகிக்கப்பட்ட சான்றிதழ் பிரதிகளின் எண்ணிக்கை

## 2.1.7 நிர்வாகப் பிரிவு

### 2.1.7.1 நிர்வாகக் கிளை

திணைக்களத்தின் பொது நிர்வாகம், மனிதவள மற்றும் பௌதீக வளங்கள் முகாமைத்துவம், அலுவலக முகாமைத்துவம், வாகனப் பராமரிப்பு, பயிற்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள், கொள்முதல் நடவடிக்கைகள், திணைக்களத்திற்குரிய பிராந்திய அலுவலகங்கள் மற்றும் ஏனைய பணிகளுடன் தொடர்புடைய காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் என்பன இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறே, திணைக்களத்தின் உள்ளக மற்றும் வெளிப் பிரிவுகளுடன் சிறந்த ஒருங்கிணைப்பையும் முகாமைத்துவத்தையும் பேணி வருவதும் நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அப்பணிகள் பின்வரும் கிளைகள் மற்றும் அலகுகள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இந்த அனைத்து நடவடிக்கைகளும் கட்டுப்பாட்டாளர் (நிர்வாகம்) அவர்களின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது.

- ▲ நிருவாகக் கிளை
- ▲ பயிற்சி மற்றும் அபிவிருத்திக் கிளை
- ▲ கொள்முதல் கிளை
- ▲ போக்குவரத்துக் கிளை
- ▲ பொதுமக்கள் தகவல் அலகு
- ▲ வரவேற்பு கருமபீடம்
- ▲ பியஸ வளாகம்

### 2025ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பணிகள்

**1. ஆட்சேர்ப்புக்கள்**

» **உதவிக் கட்டுப்பாட்டாளர் (திணைக்கள) பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்.**

உதவிக் கட்டுப்பாட்டாளர் (திணைக்களப்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக சிரேஷ்ட அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்களுக்கு 2025.11.24 ஆம் திகதி நடைப்பெற்ற நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய 03 உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

» **அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்களை தரம் II க்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட / திறந்த போட்டிப் பரீட்சை**

அதிகாரமபெற்ற உத்தியோகத்தர்கள் தரம் II க்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2025.07.26 ஆம் திகதி நடாத்தப்பட்டு 2025.11.19 ஆம் திகதி தகைமைப்பெற்ற விண்ணப்பதாரர்கள் 42 பேர் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர். எஞ்சிய மூவரை நியமிப்பதற்கு

நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் திறந்த அடிப்படையில் தரம் II க்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போட்டிப் பரீட்சை 2025.08.16 ஆம் திகதி நடாத்தப்பட்டு தகைமைபெற்ற 68 பேரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

» **செயற்படுத்தல் உதவி உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல்**

செயற்படுத்தல் உதவியாளர் பதவிகளுக்கு 50 பேரை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு 2025.08.01 ஆம் திகதி முதல் தகைமைபெற்ற விண்ணப்பதாரிகளில் 05 பேரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

» **பதவி உயர்வுகள்**

| பதவி | எண்ணிக்கை | பதவி உயர்வுப் பெற்ற தரம் |
|---|---|---|
| இலங்கை நிர்வாக சேவை தரம் II/III | 05 | இலங்கை நிர்வாக சேவை தரம் I/II |
| அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் II | 23 | சிரேஷ்ட அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் I |
| அரச முகாமைத்துவ உதவியாளர் தரம் II/III | 20 | அரச முகாமைத்துவ உதவியாளர் தரம் I/II |
| அரச முகாமைத்துவ உதவியாளர் தரம் I | 01 | நிருவாக உத்தியோகத்தர் |
| சாரதி II/III | 06 | சாரதி I/II |
| அலுவலக உதவியாளர் சேவை தரம் II/III | 08 | அலுவலக உதவியாளர் சேவை தரம் I/II |

» **வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை**

- அலுவலகப் பணியாளர் சேவையின் தரம் I, II மற்றும் III இற்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையானது 2025.05.29 ஆம் திகதி நடாத்தி முடிக்கப்பட்டுள்ளது.
- இணைந்த சாரதி சேவையின் தரம் I மற்றும் தரம் II இற்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளை நடாத்துவதற்குத் தேவையான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (நேர்முகப்பரீட்சை சபை பெயரிடப்பட்டு, பொது நிர்வாக அமைச்சின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.)
- அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் தரம் I இற்குரிய உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையை நடாத்துவதற்கான அனைத்து ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளும் நிறைவு செய்யப்பட்டு, இப்பரீட்சையை 2026 ஜனவரி மாதத்தில் நடாத்துவதற்காக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

» **ஒழுக்காற்று நடவடிக்கைகள்**

- ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆரம்ப விசாரணைகளின் எண்ணிக்கை : 06
- ஆரம்ப விசாரணை நிறைவுற்று மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுவரும் கோப்புக்களின் எண்ணிக்கை : 02

» **திணைக்கள ஆளணி**

| | அங்கீகரிக்கப்பட்ட கேடர் | தற்போதுள்ள கேடர் | வெற்றிடம் /மிகை** |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 71 | 58 | 13 |
| மூன்றாம் நிலை | 642 | 435 | 207 |
| இரண்டாம் நிலை | 576 | 484 | 92 |
| ஆரம்ப நிலை | 151 | 135 | 16 |
| தற்காலிக | 14 | 07 | 07 |

### 2.1.7.2 நலன்புரி அலகு

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் கடமையாற்றும் சுமார் 1200 உத்தியோகத்தர்களை உறுப்பினர்களாகக் கொண்ட குடிவரவு மற்றும் குடியகல்வு நலன்புரிச் சங்கம், உறுப்பினர்களினதும் அவர்களது குடும்பத்தினரதும், பொதுவான ஒட்டுமொத்த சமூகத்தினரதும் நலனுக்காக சமய, சமூக மற்றும் கலாசார ரீதியாக பல்வேறு வேலைத்திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. இதனூடாக, உடல் மற்றும் மன ரீதியாக ஆரோக்கியமான பணியாளர்களை உருவாக்குவதன் மூலமும், அவர்களின் திறமையான மற்றும் திருப்திகரமான சேவையின் ஊடாகவும் பொதுமக்களுக்கு மிகவும் தரமான சேவையை வழங்குவதே இச்சங்கத்தின் நோக்கமாகும்.

- **2025 ஆம் ஆண்டில் நலன்புரி சங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**



இவ்வாண்டும், திணைக்கள உத்தியோகத்தர்களின் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்காக வருடாந்தம் வழங்கப்படும் பயிற்சிப் புத்தக தொகுதிகள விநியோகிக்கப்பட்டன.

திணைக்கள பணியாளர்களுக்கான சதுரங்கப் போட்டி 2025.02.18 ஆம் திகதி 07 வது மாடியில் நடைபெற்றது.







நூலக வாசகர்களுக்காக, கடந்த வருடத்தில் (2025) வெளியிடப்பட்ட அனைத்து புத்தகங்களையும் எமது நூலகத்தில் சேகரிப்பதற்காக ரூ. 413,703.00/- தொகை செலவிடப்பட்டது.

## 2.1.8 நிதிப் பிரிவு

பிரதான கணக்காளரின் மேற்பார்வையின் கீழ் கணக்காளர் (செலவினம்) மற்றும் கணக்காளர் (வருமானம்) ஆகியோரின் வழிகாட்டலின் பேரில் கொடுப்பனவுப் பிரிவு, வரவுசெலவுப் பிரிவு மற்றும் வருமானப் பிரிவு எனும் மூன்று அலகுகளின் கீழ் திணைக்களத்தின் நிதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**பணிகள்:**

01. குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் நிதி நிர்வாகமே கணக்குப்பிரிவின் பிரதான பணியாகும்.
02. திணைக்கள வருமானங்களைச் சேகரித்தல், கணக்கிடுதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
03. அரசாங்க உத்தியோகத்தர்களின் முன்பணக் கணக்குகளை நிர்வகித்தல்.
04. பொது வைப்புக் கணக்குக் கடமைகள் மற்றும் திணைக்களத்திற்குச் சொந்தமான சொத்துக்களை நிர்வகித்தல்.
05. நிதிப்பிரமாணங்கள் மற்றும் திறைசேரிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம், திணைக்களத்தின் செலவினங்களை அங்கீகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டு எல்லைகளுக்கு உட்பட்டு மேற்கொள்வதற்கான வழிகாட்டல்களை வழங்குதல்.
06. வருடாந்த மற்றும் மாதாந்த அறிக்கைகளாக வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள், வருடாந்த வருமான மதிப்பீடுகள், வருடாந்தக் கணக்குகள் மற்றும் மாதாந்தக் கணக்குச் சுருக்கங்கள் மற்றும் பொது வைப்புக் கணக்கு அறிக்கைகளைத் தயாரித்து, குறித்த திகதிகளில் அமைச்சு, பொதுத் திறைசேரி மற்றும் தொடர்புடைய ஏனைய திணைக்களங்களுக்கும் நிறுவனங்களுக்கும் சமர்ப்பித்தல்.
07. திணைக்களத்தின் அனைத்து நிதிசார் நடவடிக்கைகளையும் வழிநடத்துதல் மற்றும் நிர்வகித்தல்.

## 2.1.9 உள்ளக கணக்காய்வுப் பிரிவு

திணைக்களத்தின் நோக்கங்களை அடைவதற்கு பங்களிப்புச் செய்யும் வகையில் நிதி விடயங்களில் உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பில் பங்கேற்று அந்த விடயங்களில் பிழைகள் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்கும் கண்டறிவதற்கும் பயன்படுத்தப்படும் உள்ளக பரிசோதனைகளின் ஒழுங்குமுறை மற்றும் போதுமான தன்மை குறித்த தொடர்ச்சியான மதிப்பாய்வு மற்றும் சுயாதீன மதிப்பீட்டைப் பேணிவரல். திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட அல்லது திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் திட்டங்களை செயல்படுத்துவதிலும், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவேற்றுவதிலும் அடையப்பெற்ற முன்னேற்றத்தை தீர்மானிப்பதில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் முன்னேற்ற மீளாய்வுக் குழுவுக்கும் உதவுதல். இந்தப் பணிகளில் ஈடுபடுபவர்களுக்கும் திணைக்களத் தலைவருக்கும் முன்னேற்ற / ஆய்வுக் குழுவிற்கும் இடையே, ஏற்புடையவாறு ஒரு இணைப்பாளராகச் செயல்படுதல்.

- **2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்**

► ஒவ்வொரு காலாண்டிலும் திணைக்கள கணக்காய்வு மற்றும் முகாமைக் குழுக் கூட்டங்களை நடாத்துதல்

► உள்ளக கணக்காய்வு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

- திணைக்களம் சார்ந்த வழக்கு நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவேற்றப்படுதல் தொடர்பான கணக்காய்வு - 2025
- திணைக்களத்தில் பயன்படுத்தப்படும் மென்பொருட்கள் (Software) மற்றும் வன்பொருட்களை (Hardware) தடையின்றிப் பேணுதல் தொடர்பான கணக்காய்வுப் பரிசோதனை
- திணைக்களத்தின் கணினி முறைமைக்குச் சேவைகளை வழங்கும் வெளி நிறுவனங்களுடன் உரிய முறையில் ஒப்பந்தங்களை இற்றைப்படுத்தல் தொடர்பான கணக்காய்வு - 2025
- கடவுச்சீட்டுகளைத் தாமதமின்றி வழங்குதல் மற்றும் அது சார்ந்த செயல்முறை தொடர்பான உள்ளக கணக்காய்வு அறிக்கை - 2025
- குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பணிகளைப் பரவலாக்கல் செய்தல் தொடர்பான கணக்காய்வு - மாத்தறை பிராந்திய அலுவலகம்
- கொள்முதல் திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் பொருட்கள், சேவைகளைக் கொள்முதல் செய்தல் தொடர்பான பணிகள் குறித்த உள்ளக கணக்காய்வு அறிக்கை - 2025
- வருமான மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் வருமானக் கணக்குகளைப் பேணுதல் தொடர்பான கணக்காய்வு - 2025
- தனிப்பட்ட கோப்புகளை இற்றைப்படுத்தல் மற்றும் வாகன நிர்வாகம், பராமரிப்புப் பணிகள் தொடர்பான கணக்காய்வு - 2025
- குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பணிகளைப் பரவலாக்கல் செய்தல் தொடர்பான கணக்காய்வு - குருநாகல் பிராந்திய அலுவலகம் - 2025
- குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பணிகளைப் பரவலாக்கல் செய்தல் தொடர்பான கணக்காய்வு - கண்டி பிராந்திய அலுவலகம் - 2025

► **சமர்ப்பிக்கப்பட்ட விசேட அறிக்கைகள்**

- விசேட புலனாய்வுகள் - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்
- திணைக்களத்தின் ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பான புலனாய்வு
- N 10789007 இலக்க வெளிநாட்டு கடவுச்சீட்டு விடுவிப்பு தொடர்பான விசேட புலனாய்வு
- போலி கடவுச்சீட்டுகளைத் தயாரித்தல் சம்பந்தமாக
- குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கணினி முறைமைகளின் ஒப்பந்தங்கள், கொடுப்பனவுகள் மற்றும் செயல்திறன் பரிசோதனை
- திணைக்களத்திற்கு வெளியிலிருந்து வரும் அழைப்புகளுக்குப் பதிலளித்தல் தொடர்பான பரிசோதனை

- குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் ஒன்லைன் (Online) விசா வழங்கும் முறைமை தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல்
- உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுகளை (Official Passports) வழங்குதல் தொடர்பான உள்நாட்டலுவல்கள் சுற்றறிக்கை இலக்கம் 01/2016 ஐத் திருத்தம் செய்தல்

► **ஏனைய விசேட பணிகள்**

- 2026 ஆம் ஆண்டிற்கான இடர் பதிவேட்டை தயாரித்தல்
- 2026 ஆம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தல்
- திணைக்கள நலன்புரிச் சங்கத்தின் 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கணக்குகளைப் பரிசோதித்தல்

## 2.2 தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் வருமான உழைப்பு முன்னேற்றம்

**மொத்த வருவாய்**

**44.88**

**ரூ. பில்லியன்**

**இலத்திரனியல் பயண அனுமதி**
**39.23%**
ரூ. பில்லியன் 17.61

**வழங்கல் மற்றும் மாற்றங்கள்**
**26.34%**
ரூ. பில்லியன் 11.82

**விசா வழங்கல் மற்றும் நீட்டிப்பு**
**18.24%**
ரூ. பில்லியன் 8.18

**வெளிநாடுகளில் உள்ள தூதரகங்கள்**
**8.52%**
ரூ. பில்லியன் 3.82

**துறைமுகங்கள் செயல்பாடு**
**0.59%**
ரூ. பில்லியன் 0.26

**குடியுரிமைகள்**
**7.08%**
ரூ. பில்லியன் 3.18

இத்துறையின் மொத்த வருவாய் இலக்கு 2025-ஆம் ஆண்டில் ரூ. 38.0 பில்லியன் மற்றும் 2025 ஆம் ஆண்டில் உண்மையில் உருவாக்கப்பட்ட மொத்த வருமானம் ரூ. 44.88 பில்லியன்.




| மாதம் | மொத்த வருவாய் | மாதம் | மொத்த வருவாய் |
|---|---|---|---|
| ஜனவரி | 4.39 | ஜூலை | 4.99 |
| பெப்ரவரி | 3.79 | ஆகஸ்ட் | 3.48 |
| மார்ச் | 3.58 | செப்டம்பர் | 3.29 |
| ஏப்ரல் | 3.13 | ஒக்டோபர் | 3.99 |
| மே | 3.12 | நவம்பர் | 3.55 |
| ஜூன் | 2.96 | டிசம்பர் | 4.63 |

## வருவாய் பகுப்பாய்வு 2019-2025




| வருடம் | கடவுச்சீட்டு வழங்கல் மற்றும் திருத்தல் | வெளிநாட்டுத் தூதரகங்கள் ஊடாக கடவுச்சீட்டு வழங்கல் | இறங்குதுறை நடவடிக்கைகள் | வீசா வழங்கல் / நீடித்தல் | இலத்திரனியல் பயண அனுமதி (ETA) | குடியுரிமைப் பிரிவு | மொத்த வருமானம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2019 | 3,810 | 1,695 | 58 | 1,170 | 5,860 | 1,462 | **14,054** |
| 2020 | 1,138 | 1,588 | 31 | 823 | 901 | 1,058 | **5,539** |
| 2021 | 3,002 | 2,316 | 37 | 1,335 | 1,227 | 747 | **8,664** |
| 2022 | 9,998 | 3,392 | 54 | 4,476 | 5,042 | 879 | **23,841** |
| 2023 | 12,522 | 3,823 | 217 | 7,091 | 17,740 | 1,381 | **42,774** |
| 2024 | 8,866 | 3,650 | 255 | 8,557 | 13,769 | 2,921 | **38,018** |
| 2025 | 11,823 | 3,822 | 264 | 8,186 | 17,606 | 3,179 | **44,880** |

## செலவின பகுப்பாய்வு 2025

மொத்த ஒதுக்கீடு (2025)
ரூ. மில்லியன்
**9,000**

உண்மையான செலவு (2025)
ரூ. மில்லியன்
**5,423**

மதிப்பிடப்பட்ட சதவீதத்தின் முன்னோடியாக % (2025)
**60.26**

» 2025 ஆம் ஆண்டில் திணைக்களச் செலவீனங்களுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஒதுக்கீடு 9,000 மில்லியன் ரூபாவாகும். அந்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து மீண்டுவரும் செலவீனங்களுக்காக 3,763.27 மில்லியன் ரூபாவும், மூலதனச் செலவீனங்களுக்காக 5,236.73 மில்லியன் ரூபாவும் அங்கீகரிக்கப்பட்டிருந்தன.

» 2025 ஆம் ஆண்டின் மொத்த உண்மையான செலவினம் 5,423 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன், அதில் மீண்டுவரும் செலவீனங்களுக்காக 2,616.28 மில்லியன் ரூபாவும், மூலதனச் செலவீனங்களுக்காக 2,806.72 மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது.



| செலவின வகை | 2025 மதிப்பீடு | உண்மைச் செலவினம் 2025.12.31 திகதிக்கு | நிதி முன்னேற்றம் மதிப்பீட்டின் (%) |
|---|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | 3,763,266,000 | 2,616,280,087 | 69.52% |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 1,323,400,000 | 1,218,663,283 | 92.09% |
| பிரயானச் செலவினம் | 72,250,000 | 59,120,652 | 81.83% |
| வழங்கல்கள் | 190,000,000 | 106,215,805 | 55.90% |
| பராமரிப்புச் செலவினம் | 383,552,000 | 236,100,465 | 61.56% |
| ஒப்பந்த சேவைகள் | 1,784,064,000 | 988,937,284 | 55.43% |
| மாற்றல்கள் | 10,000,000 | 7,242,598 | 72.43% |
| மூலதனச் செலவினம் | 5,236,734,000 | 2,806,720,436 | 53.60% |
| மூலதனச் சொத்துக்கள் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி | 72,634,000 | 53,986,915 | 74.33% |
| மூலதனச் சொத்துக்கள் கையகப்படுத்தல் | 2,109,100,000 | 89,448,063 | 4.24% |
| பயிற்சி மற்றும் திறன் விருத்தி | 5,000,000 | 4,360,874 | 87.22% |
| வேறு மூலதனச் செலவுகள் | 3,050,000,000 | 2,658,924,584 | 87.18% |
| மொத்தம் | 9,000,000,000 | 5,423,000,523 | 60.26% |




தொடர்ச்சியான செலவின பகுப்பாய்வு-2025




மூலதனச் செலவு பகுப்பாய்வு-2025



## 2.3 விசேட வெற்றிகள்

e-Gate middleware solution

Launch of Automated Border Control Gates at BIA

2025 பெப்ரவரி முதல் மே மாதம் வரை ஒருநாள் சேவையை 24 மணி நேரமும் நடைமுறைப்படுத்தல்.

வடக்கு பிரதேசத்தில் வசிக்கும் பொதுமக்களுக்கு வசதியளிக்கும் நோக்கில் புதிய பிராந்திய அலுவலகமொன்றை நிறுவுதல்.

31.12.2025 அன்று ஆன்லைன் விண்ணப்பங்களின் காத்திருப்பு பட்டியல் 6700 ஆக குறைக்கப்பட்டது

E-gate முறைமைக்கு அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

கொழும்பு துறைமுக புதிய பயணிகள் இறங்கும் முனையத்தை நவீனமயப்படுத்தல்.

மத்தள ராஜபக்ஷ விமான நிலையத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான புதிய ஓய்வறையை நிர்மாணிப்பதற்காக நடவடிக்கை எடுத்தல்.

மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட காங்கேசன்துறை படகுச் சேவையின் பயணிகள் அனுமதி நடைமுறைகளை மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.

நுரைச்சோலை துறைமுக குடிவரவு மற்றும் குடியகல்வு அலுவலகத்திற்காகப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அலுவலக வளாகத்தைப் பெற்றுக்கொள்ளல்.

## 2.4 சவால்கள்

» 2025 ஆம் ஆண்டில் கடவுச்சீட்டு தயாரிப்பதற்காக வருகை தந்த சேவைப் பெறுநர்களின் எண்ணிக்கை சாதாரண மட்டத்தை விட மிக வேகமாக அதிகரித்தமையினால், 24 மணித்தியால பணிச் சுழற்சி (Shift) அடிப்படையில் கடமைகளை நிறைவேற்ற வேண்டியிருந்தமை.

» தித்வா சூறாவளி காரணமாக வவுனியா பிராந்திய அலுவலகத்திற்குப் பலத்த சேதங்கள் ஏற்பட்டமை.

## 2.5 எதிர்கால இலக்குகள்

- 2026 ஆம் ஆண்டில் இறங்குதுறைப் பிரிவினால் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் பணிகள்
  - மத்தள ராஜபக்ஷ விமான நிலையத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான புதிய ஓய்வறையை நிர்மாணிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
  - கொழும்பு துறைமுகத்தின் புதிய பயணிகள் முனையத்தின் நவீனமயமாக்கல் பணிகளை முழுமையாக நிறைவு செய்தல்.
  - திருகோணமலை துறைமுகத்தை அண்மித்து நிரந்தரக் கட்டிடமொன்றை அமைப்பதற்காக, சிறிமாபுர பகுதியில் உள்ள நிலப்பரப்பில் புதிய ஓய்வறையை நிர்மாணிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
  - காங்கேசன்துறை துறைமுக குடிவரவு மற்றும் குடியகல்வு வளாகத்தை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
  - காலி துறைமுகத்திற்கான புதிய கட்டிட வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
  - யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் குடிவரவு மற்றும் குடியகல்வு கடமைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கான புதிய ஓய்வறையொன்றைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- 2026 ஆம் ஆண்டில் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் விசேட வேலைத்திட்டங்கள்
  - ICAO standard photo capturing software
  - Implementation of Business Process Re-Engineering
  - Data Migration
  - Upgrade application Software to oracle 12 C
  - Change Request to the current system
  - Purchasing of Biometric vetting system
  - API/PNR Integration
  - Upgrade the web site of the department
  - Zimbra email license
  - E -gates for Departure terminal of BIA
  - BIA arrival Networking
  - Implementation Access Control System

- 2026 ஆம் ஆண்டில் புலனாய்வுப் பிரிவினால் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் வேலைத்திட்டங்கள்

  - எல்லைக் கண்காணிப்புப் பிரிவு மற்றும் இடர் மதிப்பீட்டு மையத்தின் சுமார் 5 உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவொன்றிற்கு, சைபர் குற்றங்களைத் தடுத்தல், சமூக ஊடகங்கள் ஊடாக இடம்பெறும் மோசடிகளைக் கண்டறிதல் மற்றும் அது சார்ந்த தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல் போன்றவற்றுக்கான விசேட நிபுணத்துவப் பயிற்சியை வழங்குதல்.
  - அவர்கள் மூலமாக ஏனைய அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அந்த அறிவைப் பரப்புதல் மற்றும் பிற நிறுவனங்களுடன் உரிய தகவல்களைப் பரிமாறிக்கொள்ளல். இதன் மூலம் இலங்கையிலும் இலங்கை ஊடாகவும் இடம்பெறக்கூடிய ஆபத்தான இடப்பெயர்வுகள், ஆள் கடத்தல் சார்ந்த திட்டமிடப்பட்ட குற்றங்களைத் தடுத்து இந்நாட்டின் தேசிய பாதுகாப்பை மேலும் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
  - நவீன தொழில்நுட்பம் மற்றும் உத்திகளைப் பயன்படுத்தி இடர் மதிப்பீட்டை மேலும் வலுப்படுத்துவதற்காக, இடர் மதிப்பீட்டு மையத்திற்கெனத் தனியானதொரு இடமொன்றை நிறுவுதல்.
  - இந்நாட்டின் சுற்றுலாத்துறை மேலும் வளர்ச்சியடைந்து வரும் நிலையில், நாட்டிற்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் செயற்பாடுகளை மிகச் சிறந்த முறையில் கண்காணிப்பதற்கும், அது சார்ந்து பொதுமக்களிடமிருந்து வரும் முறைப்பாடுகளைப் புலனாய்வு செய்வதற்கும் காலி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் புலனாய்வுப் பிரிவின் கிளைகளை நிறுவுதல்.
  - தடுத்து வைக்கும் மையங்களை (Detention Centers) சர்வதேச தரத்திற்கு அமையப் பேணிச் செல்வதற்காக, தடுத்து வைக்கும் முறைகள் குறித்து உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சிகளை வழங்குவதற்கு உத்தேசித்தல்.
  - சர்வதேச தரத்திற்கேற்ப அனைத்து வசதிகளையும் கொண்ட தடுத்து வைக்கும் மையமொன்றை எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்குள் நிர்மாணிப்பதற்காக நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்ள உத்தேசிப்பதுடன், இதற்கென இரண்டு ஏக்கர் நிலப்பரப்பு இத்திணைக்களத்திற்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.
  - குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கும் சீன குடிவரவு மற்றும் குடியகல்வு பிரிவிற்கும் இடையில் தரவுகள், தகவல்கள் மற்றும் எல்லைக் கண்காணிப்புடன் தொடர்புடைய விடயங்களைப் பரிமாறிக்கொள்வது குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை (MoU) மேற்கொள்வதற்குத் திட்டமிடுதல்.

- 2026 ஆம் ஆண்டில் இறங்குதுறைகள் பிரிவினால் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் பணிகள்

  - மத்தள ராஜபக்ஷ விமான நிலையத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான புதிய ஓய்வறையை நிர்மாணிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
  - கொழும்புத் துறைமுகத்தின் புதிய பயணிகள் முனையத்தின் நவீனமயமாக்கல் பணிகளை முழுமையாக நிறைவு செய்தல்.
  - திருகோணமலை துறைமுகத்தை அண்மித்து நிரந்தரக் கட்டிடமொன்றை அமைப்பதற்காக, சிறிமாபுர பகுதியில் உள்ள நிலப்பரப்பில் புதிய ஓய்வறையைக் கட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
  - காங்கேசன்துறை துறைமுக குடிவரவு மற்றும் குடியகல்வு வளாகத்தை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
  - காலி துறைமுகத்திற்கான புதிய கட்டிட வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
  - யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் குடிவரவு மற்றும் குடியகல்வுக் கடமைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கான புதிய ஓய்வறையொன்றைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

# நிதிச் செயல்பாடு

03
அத்தியாயம்

ஏசீஏ- எப்

2025 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

| திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2025 (ரூபா) | | குறிப்பு | உண்மை நிலை 2025 (ரூபா) | 2024 (ரூபா) | |
|---|---|---|---|---|---|
| | வருமானப் பெறுகைகள் | | | | |
| - | வருமான வரி | 1 | | 0 | ஏசீஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | | 0 | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | | 0 | ஏசீஏ-1 |
| 38,000,000,000 | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | 44,882,332,366 | 38,011,663,800 | ஏசீஏ-1 |
| - | மொத்த வருமானப் பெறுகைகள் (அ) | | 44,882,332,366 | 38,011,663,800 | |
| - | வருமானமற்ற பெறுகைகள் | | | 0 | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 4,280,918,000 | 3,699,290,000 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 3,729,902 | 5,045,689 | ஏசீஏ-4 |
| | முற்பணக் கணக்குகள் | | 53,645,173 | 61,599,046 | ஏசீஏ-5 |
| | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | - | 0 | |
| - | மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ) | | 4,338,293,076 | 3,765,934,735 | |
| - | மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)(ஆ) | | 49,220,625,442 | 41,777,598,535 | |
| | திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ) | * | 16,363,812,041 | 13,253,906,419 | |
| | தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ) | | 32,856,813,400 | 28,523,692,116 | |
| | கழி : செலவினம் | | | | |
| | மீண்டுவரும் செலவினம் | | - | 0 | ஏசீஏ-2(ii) |
| 1,323,400,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 1,218,663,283 | 1,055,234,245 | ஏசீஏ-2(ii) |
| 2,429,866,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 1,390,374,206 | 1,319,379,450 | ஏசீஏ-2(ii) |
| 10,000,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 7,242,598 | 7,980,619 | ஏசீஏ-2(ii) |
| | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | 0 | ஏசீஏ-2(ii) |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | 0 | ஏசீஏ-2(ii) |
| 3,763,266,000 | மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ) | | 2,616,280,087 | 2,382,594,313 | |
| | மூலதனம் செலவினம் | | | | |
| 72,634,000 | முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 53,986,915 | 31,252,863 | ஏசீஏ-2(ii) |
| 2,109,100,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 89,448,063 | 300,824,020 | ஏசீஏ-2(ii) |
| | மூலதன மாற்றல்கள் | 12 | - | 0 | ஏசீஏ-2(ii) |
| | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | 0 | ஏசீஏ-2(ii) |
| 5,000,000 | திறன் விருத்தி | 14 | 4,360,874 | 4,085,276 | ஏசீஏ-2(ii) |
| 3,050,000,000 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | 2,658,924,584 | 1,949,000,000 | ஏசீஏ-2(ii) |
| 5,236,734,000 | மொத்த மூலதனம் செலவினம் (எ) | | 2,806,720,436 | 2,285,162,159 | |
| | வைப்புக் கொடுப்பனவுகள் | | 1,709,187 | 3,304,348 | ஏசீஏ-4 |
| | முற்பணக் கொடுப்பனவுகள் | | 55,737,426 | 50,587,634 | ஏசீஏ-5 |
| | ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம் | | - | 0 | |
| | மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ) | | 57,446,613 | 53,891,982 | |
| 9,000,000,000 | மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ) | | 5,480,447,136 | 4,721,648,455 | |
| - | டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ) | | 27,376,366,265 | 23,802,043,661 | |
| | பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி | | 27,376,366,265 | 23,800,571,326 | ஏசீஏ-7 |
| | டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி | | 3,115,019 | 1,472,335 | ஏசீஏ-3 |
| | | | 27,379,481,284 | 23,802,043,661 | |

** 2025.12.31 ஆம் திகதி திணைக்களப் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள திறைசேரிப் படிவங்களில் பதியப்படாத திறைசேரிக்கு அனுப்பப்பட்ட (இணையவழி பணம்) ரு. 3,115,019.45 தொகை ஈ இன் கீழ் திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது.*

1

ஏசீஏ -பீ

**2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான**
**நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | உண்மை நிலை 2025 ரூபா | 2024 ரூபா |
|---|---|---|---|
| <u>நிதி சொத்துக்கள் அற்றது</u> | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 1,917,632,017 | 1,832,796,063 |
| <u>நிதி சொத்துக்கள்</u> | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5.'.5ஏ | 122,503,679 | 120,411,426 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | 3,115,019 | 1,472,335 |
| **மொத்த சொத்துக்கள்** | | **2,043,250,715** | **1,954,679,824** |
| <u>தேறிய சொத்துக்கள் .'. உரிமைப் பங்கு</u> | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 99,133,181 | 99,061,643 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 1,917,632,017 | 1,832,796,063 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | - | |
| <u>நடைமுறைப் பொறுப்புக்கள்</u> | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 23,370,498 | 21,349,783 |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | 3,115,019 | 1,472,335 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **2,043,250,715** | **1,954,679,824** |

பக்க இலக்கம் 01 முதல் 36 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 37 முதல் 45 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். **2025 ஆம் ஆண்டின் 17.12.2025 திகதியிடப்பட்ட இல 02/2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.** அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் பிரகாரம் நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர் : D.W.R.B. Seneviratne
பதவி : Secretary
Ministry of Public Security and Parliamentary Affairs
18th Floor, "Suhurupaya", Battaramulla.
திகதி : 24.02.2026

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர் : I. Chaminda Pathiraja
பதவி :
திகதி : 2026/02/26
Department of Immigration & Emigration
"Suhurupaya", Sri Subhuthipura Road,
Battaramulla.

பிரதான நிதி உத்தியோகத்தர்/
பிரதான கணக்காளர் /
பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர் :
திகதி : 2026/02/26
Chief Accountant
Department of Immigration & Emigration
"Suhurupaya", Sri Subhuthipura Road,
Battaramulla.

ஏசீஏ- சீ

2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
காசுப் பாய்ச்சல் கூற்று

| | කකා 2,025 ரூ. | 2024 ரூ. |
|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | | 0 |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | 16,392,617,635 | 13,312,487,205 |
| இலாபம் | - | 0 |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | 0 |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 66,754,789 | 48,349,912 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 4,280,918,000 | 3,699,290,000 |
| முற்பணங்களை அறவிடல் | 66,136,306 | 66,806,489 |
| வைப்புக்களின் பெறுகை | 3,729,902 | 5,045,689 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **20,810,156,632** | **17,131,979,295** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள் | 2,181,216,705 | 1,996,268,670 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 7,242,598 | 7,980,619 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 1,975,933 | 5,874,712 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 16,363,812,041 | 13,253,906,419 |
| முற்பணக் கொடுப்பனவு | 58,208,290 | 50,601,775 |
| வைப்புக் கொடுப்பனவு | 1,709,187 | 3,304,348 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **18,614,164,755** | 15,317,936,542 |
| **தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **2,195,991,878** | 1,814,042,753 |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | 0 |
| பங்கு இலாபம் | - | 0 |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | 0 |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | 0 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | - | 0 |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| மூலதனச் சொத்துக்களின் நிர்மாணம், கொள்முதல் மற்றுமு் ஏனைய முதலீட்டு பெறுகைகள் | 2,197,464,213 | 1,812,570,418 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **2,197,464,213** | **1,812,570,418** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | **(2,197,464,213)** | **-1,812,570,418** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | **(1,472,335)** | **1,472,335** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | 0 |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | 0 |
| பெற்ற நன்கொடைகள் | - | 0 |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | - | 0 |
| ***கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:*** | | |
| உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | 0 |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | 0 |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (I)** | - | 0 |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | - | 0 |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)** | **(1,472,335)** | 1,472,335 |
| **ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | **1,472,335** | 0 |
| **டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | **(0)** | 1,472,335 |

3

ஏசீஒ - 1

## 2025 டிசம்பர் 31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான வருமானக் கூற்று

அரசிறை கணக்கீட்டு உத்தியோத்தர்: குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

செலவின தலைப்பு இல: 226

ருபா

